# திராவிடநாடு

29—9—57 | வார வெளியீடு | விலை 0—2—6


## மந்திக்கு மணிமுடியா!

—[ செங்கீரன் ]—

தமிழாநீ உன்நிலையை எண்ணு – எண்ணித்
தலைநிமிர்ந்து வாழவழி பண்ணு
இமிழ்கடல்க ளுன்னுடைய தறிவாய் – உன்றன்
இன்தமிழைப் பாரெங்கும் சொரிவாய்

கடலாண்ட முன்னோரை எண்ணு – கஞ்சிக்குக்
கையேந்தும் நிலையினையும் உன்னு
வடவர்தலை நெறித்ததையும் எண்ணு – வடக்குக்கு
வாய்பொத்தி வாழும்நிலையையும் உன்னு

அடிமையெனுஞ் சொல்லறியாத் தமிழா – வடவர்க்கு
அடிமையாய் வாழ்ந்திடுத லழகோ?
மிடிதன்னைக் கேட்டறியாத் தமிழா – சோற்றுக்கு
'மடிப்பிச்சை' கேட்டலைதல், நன்றோ?

இல்லை'யென்று சொல்லாத தமிழா – இன்றுநீ
'இல்லை'யென் றிரந்திடுதல் நன்றோ?
தொல்லைகள் தேய்ந்துபொலி வுற்று – முன்போல்
கோலோச்சி வாழும்நாள் என்றோ?

இந்திக்குத் தமிழ்நாட்டில் வாழ்வா? – உன்னுடைய
இன்தாயின் திருமுடிக்குத் தாழ்வா?
மந்திக்கு மன்னனென முடியா? – பண்புமிகு
மனிதர்க்கு வாழ்வதன்கா லடியா?

# "காசி" நடக்கிறது!

—[illegible]—

**இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது.**

**விமான மூலம் கொண்டுபோய் இறக்கப்பட்டிருக்கிறார்கள்.**

**" சகியேன்! தாங்கேன்!", என்று குடியரசுத் தலைவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.**

*

*நீதி மன்றத்தில் வழக்கொன்று விசாரணைக்கு வந்தது.*

*கொலை! கொள்ளை!—பற்றியது அல்ல, வழக்கு. உயர்ந்தவன்! தாழ்ந்தவன்!!—சண்டை பற்றிய வழக்கு அது.*

*"நீ தாழ்ந்தவன். எங்களுடன் சரிசமமாக அமரும் யோக்யதை உனக்குக் கிடையாது. எங்கள் பிள்ளைகள் படிக்கும் பள்ளிக்கூடத்தில் உன் பிள்ளையும் உட்கார்ந்து படிப்பதா? இதை ஒருபோதும் ஒப்போம்", என்று மறுத்தனர் தங்களை உயர்ந்தவர்கள் என்று கருதிக்கொண்டிருக்கும் வெள்ளையர்*

*"இது அக்கிரமம்! அநீதி!! அரசியல் சட்டப்படி மனிதர் யாவரும் சரிநிகர் சமமாக வாழலாம் என்று இருக்கிறது. எங்களைத் தாழ்ந்தவர்கள் என்று கூறுவது தகாது. எங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளில் அனுமதிக்க மறுப்பது, மாபெரும் குற்றமாகும்", என்று தாழ்ந்தவர்கள் எனக் கருதப்படும் நீக்ரோக்கள் வாதாடினர்.*

*வழக்கு, நாட்டிலேயே பெரியதான சுப்ரீம் கோர்ட்டிற்குச் சென்றது. விசாரித்தவர்கள் நீக்ரோக்கள் அல்ல! வெள்ளை நீதிபதிகள்தான்!!*

*நீதித் தராசினை ஏந்தியிருக்கும் அந்த உத்தமர்கள், வெள்ளையர் தம் போக்கைக் கண்டித்து, கருப்பர்களுக்கும் நாட்டு வாழ்வில் சம உரிமை உண்டெனத் தீர்ப்பளித்தனர்.*

*அர்கான்சாஸ் என்றொரு மாகாணம்! அதற்கு ஒரு கவர்னர். **பேபஸ்** என்று பெயர். அவர் சுப்ரீம நீதிமன்றத்தீர்ப்பை, மதிக்க மறுக்கிறார்—வெள்ளையர் பள்ளிக்குக் கருப்பர்கள் வருவதா என்று எதிர்க்கிறார்.*

*வரவிடேன்! இது என் ஆட்சிக்குட்பட்ட மாகாணம்! இதற்குள் நான் வைத்ததே சட்டம்!!—என்று, உரத்த குரலில் ஓங்காரக் கூச்சலிடுகிறார். இது கண்ட அமெரிக்க மத்ய சர்க்கார், இராணுவத்தை அனுப்பியிருக்கிறது—ஐசனேவர், "நம்மைப் பார்த்து உலகம் சிரிக்கும். இப்போதே, அமெரிக்காவைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுகிறார்கள். அவர்கள் வாய்க்குச் சர்க்கரை போட்டது போலிருக்கும் இந்தச் சம்பவம். நாட்டின் பெரிய நீதிமன்றம் அளித்த தீர்ப்பையே மீறுவதா? முடியாது! வெள்ளைப் பள்ளிகளில் நீக்ரோக்கள் நுழையச் செய்வேன்",— என்று இராணுவத்தை விமான மூலம் கொண்டுபோய் இறக்கியிருக்கிறார்.*

*மாகாண அரசு மறுக்கிறது! மத்ய அரசு நீதிக்குப் பரிந்து இராணுவத்தை அனுப்புகிறது!!*

*

*இந்திய உபகண்டத்திலும், மத்ய அரசு இருக்கிறது. ஆனால், அமெரிக்காவைவிட இங்கு, எல்லா அதிகாரங்களும் மத்திய அரசிடம்தான்.*

*அமெரிக்காவில், இப்படி மத்திய அரசு தலையிடும் நிகழ்ச்சி ஒரு அபூர்வமானதாகக் கருதப்படுகிறது! ஏனெனில் மாகாணங்களின் துறையில், இங்குபோல மத்திய அரசு அடிக்கடி தலையிடும் நிலைமை அங்கு கிடையாது. ஆயினும், மனிதநீதி மறுக்கப்படுவது கேட்டு, அதை நிலைநாட்டாவிடில் உலகம் தன்னைப் பழிக்குமே என்று இராணுவத்தை அனுப்புகிறார், ஐசனேவர்.*

*இதோ இங்கு ஒரு நிகழ்ச்சி! இந்திய உபகண்டத்தை யாளும் நேரு பிரானின் சொந்த மாகாணமாம், ஐக்கிய மாநிலத்தில் நடைபெற்றிருக்கிறது. அந்த மாநிலத்துக் கவர்னர் **வி. வி. கிரி** கடந்த 8-ந் தேதி, காசியிலுள்ள விசுவநாதர் ஆலயத்துக்குச் சென்று தரிசிக்க இருந்தாராம்! ஆனால் தரிசிக்காமல் திரும்பிவிட்டாராம்!!*

*காரணம் என்ன தெரியுமா? கவர்னர் கோயிலுக்கு வருகிறார் என்று கேள்விப்பட்ட ஏழெட்டு தாழ்த்தப்பட்ட குடிமக்கள், கவர்னருடன் ஆலயப் பிரவேசம் செய்வதென இருந்தனராம். இது கேள்விப்பட்ட கவர்னர், இந்தச் சண்டைக்குத்தான் காரணமாக அமையலாகாதென்று திரும்பியிருக்கிறார்.*

*காசி விசுவநாதர் ஆலயத்துக்குள் 'அரிசனங்களை' விட மறுத்து வருகிறார்கள், உயர் குடியினர்!*

*இந்த அடாத செயலை எதிர்த்துப பழங்குடி மக்கள் பலகால*

(13-ம் பக்கம் பார்க்க)

## அறிவழகன் — எழிலரசி திருமணம்

*பேராசிரியர் க. அன்பழகன், எம். ஏல். ஏ.யின் தம்பியும், நமது கொள்கைமீது குன்றாப் பற்றுக் கொண்டவரும், சென்னை தியாகராயர் கல்லூரி விரிவுரையாளருமான **க. அறிவழகன் எம் ஏ.** கடந்த 11-9-57 அன்று மாயவரத்துக் கருகிலுள்ள இலந்தங்குடியில் திருவாளர் சம்பந்தனார் அவர்களது திருச்செல்வி **எழிலரசியை** வாழ்க்கைத் துணைவியாக **அண்ணுதுரை** தலைமையில் ஏற்றார் எனும் செய்தியை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறோம். புதுமணம் பெற்ற தோழரும், தோழியரும் எல்லா நலன்களும் பெற்று இன்புற்று வாழ வாழ்த்துகிறோம்.*

# கண்ணீரைத் துடைத்துக்கொண்டு...

16] ஆண்டு சந்தா ரூ. 8 [29-9-57] தனிப் பிரதி 16-காசு [இதழ் 11

மதமாச்சர்யங்களாலும், வகுப்புக் கலவரங்களாலும் வடநாடு, இரத்தக்குளம், ஆனபோதெல்லாம் இம்மியளவும் ஆவேசத்துக்கு இரையாகாது, அன்பும் அறமும் அரசோச்சிய மண்ணிலே, கடந்த சில தினங்களில் 'கண்ணூவிக் காட்சி'கள் பல நிகழ்ந்திருக்கின்றன! சாதிச்சண்டை — என்று சாற்றுகின்றனர். சாதிமட்டுமல்ல காரணம். அரசியல் போட்டியின் விளைவு என்றும் விளக்கம் தருகின்றனர். காரணம் எதுவாயினும், நடந்த நிகழ்ச்சிகள் தமிழ் மண்ணிற்கு ஏற்பட்ட மாபெரும் களங்கமென்போம். சச்சரவு — பூசல் — தகராறு எதுவாயினும், சமரசமாகப் பேசி முடிவுக்குக் கொண்டுவருவது, தமிழர்தம் —அதுவும் கிராமப் புறங்களில் நீடிக்கும்—பரம்பரை வழக்கமாகும். இதையொட்டி கடந்த சின்னாட்களுக்கு முன்பு, முதுகுளத்தூர் வட்டாரத்தில் இராமநாதபுரம் மாவட்டக் கலெக்டரால், ஒரு சமரச மாநாடும் கூட்டப்பட்டிருக்கிறது. அது முடிந்த சில தினங்களுக்கெல்லாம் கொலையும் கலவரமும் மூண்டு, குத்திக்கொண்டும் வெட்டிக்கொண்டும், ஏராளமான மக்கள் இறந்தனர் அறுபதுக்குமேல், என்கிறது அரசினர் செய்தி; அதற்கு மேலிருக்கும் என்கின்றது பாராளுமன்றஉறுப்பினர் பசும்பொன் முத்துராமலிங்கரும், சட்டசபை உறுப்பினர் சசிவர்ணம் அவர்களும், விடுத்துள்ள அறிக்கை! இதுபோதாதென்று ஆட்சியாளரும், ஏழு இடங்களில், ஒவ்வொரு நாளும் துப்பாக்கியால் சுட்டுப் பொசுக்கியிருக்கின்றனர். இதன் காரணமாகப் பலர் மாண்டிருக்கின்றனர்! ஓரிருவாரங்களுக்கு முன்புதான் டில்லி பார்லிமெண்டில் பந்த் எனும் அமைச்சர் அறிவித்தார், "இனி, கொல்லுவதற்காகச் சுடுவது இருக்காது! முழங்காலுக்குக் கீழ்தான் போலீசார் சுடுவார்கள்!", என்று. ஆனால், காமராசரின் சர்க்கார், காலுக்குக் கீழ் சுடவில்லை! வயிற்றில் குண்டடிபட்டோரும், முதுகில் குண்டு பாய்ந்தோருமாகப் பலர் இறந்திருக்கின்றனர்! எத்தனைபேர் என்பதற்கு சரியான புள்ளி விபரம் கிடைக்கவில்லை. காங்கிரஸ் ஆட்சியின் இந்தப் பத்தாண்டுக் காலத்தில், துப்பாக்கிகள் எத்தனையோ முறை வெடித்திருக்கின்றன. ஆனால், கீழத்தூவல் கிராமத்தில் துவங்கி பல கிராமங்களில் தொடர்ந்து, துப்பாக்கிக்கு வேலைதரப்பட்டிருக்கிற விபரீதம், எங்கும் இதுவரை நிகழ்ந்ததில்லை. இந்தக் கோரம், காமராசரின் அரசுக்கு ஒரு கரும்புள்ளி என்போம்! போலீசாரின் நடவடிக்கைகள், அந்த வட்டாரத்தையே கிடுகிடுக்க வைத்துள்ளதெனக் கேள்விப்படுகிறோம்—அமைதியை உண்டாக்கச் சில சமயங்களில் கடுமையான நடவடிக்கைகள் எடுக்க நேரலாம். கடுமையான நடவடிக்கை என்பதற்கும் கிடுகிடுக்க வைக்கும் நடவடிக்கை என்பதற்கும் வித்தியாசம் ஏராளம். போலீஸ் அமைச்சர் பக்தவத்சலம், போலீசாரின் தீரத்தைப் பாராட்டியிருக்கிறார். ஆனால் முதுகுளத்தூர் வட்டாரத்து மக்கள் போலீசென்றாலே, ஆத்திரமும் 'ஐயோ' எனும் அலறலும் காட்டுவதாகச் செய்திகள் கூறுகின்றன. அந்தளவுக்கு பயமும் பீதியும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்று பாராட்டுத் தெரிவிக்கும் பக்தவத்சலனார், முதுகுளத்தூர் துணைத் தேர்தலுக்குப் பிரச்சாரம் செய்யச் சென்றபோது, எச்சரிக்கை விடுத்துவந்ததை இன்னும் அந்த வட்டாரத்தினர் மறந்திருக்க மாட்டார்கள்! எனவேதான், அந்த வட்டாரங்களில் இந்தப் பெருங் கலவரத்துக்கு மூல காரணமே, தேர்தலில் தோல்வியுற்ற காங்கிரசினர் என்று கருதப்படுகிறது!!

இதற்கு ம்ன்பு நடந்த தேர்தலில் நெல்லிக்குப்பம் மஜீது எப்படிக் கொல்லப்பட்டார் என்பது அறிவோம். கட்சியின் வளர்ச்சி பொறுத காங்கிரசினரால் கொலையுண்டு மாண்ட உடையார்பாளையம் வேலாயுதம், வண்ணையம்பதி பாண்டியன் ஆகியோரின் சாவுகளையும் நாம் அறிவோம். ஆட்சி தமதெனும் காரணத்தால்—நல்லவர்களல்ல—நாட்டில் குட்டை குழப்பியே காரிய சாதனை பெற்றுவரும் தீய மதியினர், இதுபோன்ற 'தீ'யினை மூட்டிவிடத் தவறுவதில்லை. இப்போது மறவர் குல மக்களும், ஆதித்திராவிடப் பழங்குடியினரும் மிக மிகப் பாதிக்

கப்பட்டிருக்கின்றனர்! தாலியிழந்தோரும், தமது குடும்பங்களை இழந்தோரும், குடியிருக்கும் வீடுகளைப் பறி கொடுத்தோருமாகப் பலர், அலைகின்ற நிலைமை உண்டாக்கப்பட்டிருக்கிறது!! உண்மையில் இது நெஞ்சு கொதிக்கக்கூடிய சம்பவமாகும்.

உயர்ந்த சாதியினருக்கும் தாழ்ந்த சாதியினருக்கும் இடையிலே மூண்ட ஒரு சண்டை என்றுமட்டும் இதனைக் கொள்ளார் எவரும். இரு சார்பிலும், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு எவரோ மூட்டிவிட்ட தீயென்றே கருதுவர். இத்தீயினை அணைப்பதில் ஆளும் கட்சி மிக்க பொறுப்பெடுத்திருந்தால், இந்த அவலநிலை ஏற்பட்டிருக்காது.

நடந்தது, நடந்துவிட்டது—இனி அவைகளின் சாம்பலைக் கிளறுவதனால், மாச்சரியமும் எரிச்சலுமே அதிகமாகும். எனவே, இனி நடக்கவேண்டியது குறித்து, ஆளுவோரும் பிறரும் கவனம் செலுத்தவேண்டும்.

நெஞ்சு கொதிக்கக்கூடிய இந்தக் கலவரங்களைக் கண்டு தமிழ்நாட்டிலுள்ள சகல அரசியல் கட்சியினரும், இந்த அக்கிரமங்களைத் தகர்த்திடத் தத்தம் கடமையினைச் செய்ய முன்வந்திருக்கிறார்கள். இதனைத் தக்க வகையில் பயன்படுத்திக்கொண்டு நிரந்தரமான அமைதி ஏற்பட வழிவகைகள் செய்யப்படவேண்டும்.

சாதிபேதத்தை நீக்குவதிலும், வர்ணாசிரம முறை அறவே ஒழிக்கப்படவேண்டுமென்பதிலும் மாறுபட்ட கருத்து, தமிழகத்து அரசியல் கட்சிகளுக்கிடையே, இல்லை. எனினும், எப்படியோ இந்த மனோபாவம், இலைமறை காயாக ஒரு பக்கத்தில் உருவெடுத்த வண்ணமே வருகிறது. இத்துணை நாளும் ஏழையராய், இயலாதவராய், கொடுமைகட்கு ஆட்பட்டோராய், கீழ் சாதியினராய், மதிக்கப்பட்டு வந்த மக்களிடையே, தமக்கு உயர் சாதியினரால் அளிக்கப்பட்டு வந்த அநீதிகளை ஒழிக்கவேண்டும என்கிற புத்துணர்ச்சி எழும்பியுள்ளது! இதன் காரணமாக ஒடுக்கப்பட்ட வகுப்பு ஒவ்வொன்றிலும் சங்கமும் கூட்டுறவும் மலர்ந்தும் வருகிறது! இந்த உணர்ச்சி ஆண்டாண்டு காலமாக இருந்து வரும் சாதிக்கொடுமை எனும் விலங்கினை ஒடித்தெறியப் பயன்பட வேண்டுமே ஒழிய, இன்னொரு வகுப்பினருக்கும் தமக்குமிடையிலே பலப்பரீட்சை பார்த்துக்கொள்வதாக அமைதல் ஆகாது; தகாது.

முதுகுளத்தூர் கலவரங்களில் பாதிக்கப்பட்டவர்களெனச் செய்திகள் கூறும்மறவர்குல மக்களும் சரி, பள்ளர் குலத்தினரும் சரி, சமூகத்தின் முதல் படிக்கட்டில் இருப்பவர்களல்ல. இவர்கள் எல்லாம் ஒன்று திரண்டு, சமூக விடுதலைக்காகவும் பொருளாதார விடுதலைக்காகவும் பாடுபடவேண்டிய நிலைமையிலிருப்போர்தான். இவர்களது வீரமும் தீரமும் இந்தப் பொதுப் பள்ளத்தைத் தூர்த்திடப் பயன்படாமல் இப்படி வீணே விரயமாவது, கண்ணீர் சிந்தவேண்டிய கட்டம் என்போம். இவர்கள் எல்லாம் இன்றல்ல; ஒரு காலத்தில்—ஒரே தமிழ்க் குடியினராக வாழ்ந்தவர்கள்தான்! இடையிலேற்பட்ட 'உயர்வு தாழ்வு'களால் சிதறுண்டுபோயினர்—சிறுசிறு வகுப்பாகவும் அமைந்தனர்! இடையிலேற்பட்ட இந்தப் பாழ்நிலை அகலவும், புதுமலர்ச்சி உருவாகவும், பொறுப்பேற்றுக்கொண்டிருக்கும் தலைவர்கள் இருதரப்பிலும் உள்ளனர்.

அவர்களைச் சிரம் வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறோம்—இனியாவது பொதுத் தீமைகளை ஒழிக்கக் கங்கணம் கட்டுங்கள்! சமூகத்தை அரித்துக் கெடுக்கும் இந்தச் சாதிச் சனியனை விரட்டியடிக்க வீரத்தையும் நேரத்தையும் பயன்படுத்துங்கள்!!

இதனால்தான் வடார்க்காடு மாவட்டத் தி. மு. க. மாநாட்டில், அங்கு நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக்கண்டு கண்ணீர் வடித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில்......"அரசியலார் இதுவரையில் கையாண்டு வருகிற முறைகள் கலவரங்களை வளர்ப்பதாகவே இருக்கிற காரணத்தால், கலவரப் பகுதிகளுக்குச் சென்று அமைதியை நிலைநாட்ட சர்வகட்சித் தலைவர்களைக் கொண்ட சமாதானக் குழு ஒன்றை நிறுவி, நிலைமை சீரடைவதற்கான நடவடிக்கைகளில் உடனடியாக ஈடுபடும்படி இம்மாநாடு அரசியலாரை வற்புறுத்துகிறது" என்று கேட்டுக்கொண்டிருக்கிறது.

நிலையான அமைதி ஏற்படச் செய்தல் வேண்டும்! அதற்கு, கருத்து வேறுபாடுகளிருப்பினும் தமிழகத்தில் அன்பு வழி தழைக்க ஏகமனதாக முன்வரும் சகல அரசியல் கட்சிகளும் ஒன்று சேர்ந்து முயலவேண்டும்!

# மைனரும் மங்கையும்!

"அவசரமாகப் 'பஸ்' ஏறச் சென்று கொண்டிருக்கிருன். "ஐயா, பிச்சை!" என்றொரு குரல் கேட்கிறது. "சரி, சரி! இந்தா" என்று கையில் கிடைத்த காலணுவையோ, அரையணுவையோ போட்டுவிட்டுப் போவது சகஜம். திரும்பிப் பார்க்கிருன் இவன்! பிச்சை கேட்டவள், பெண் — அதிலும் அழகுள்ள பெண்ணென்று தெரிகிறது!! "இந்தா!", என்று ஒரு ஐந்து ரூபாய் நோட்டையெடுத்து அவள் கையில் வைத்து, "அந்திநேரம்—அந்தப்பக்கம்" என்று அங்குமிங்கும் பார்த்துக்கொண்டு சொல்வானுனல், அவனுடைய நோக்கம் என்னவென்று எடுத்துச் சொல்லவா வேண்டும்?" என்று கேட்டார் அண்ணு! வ. ஆ. மாநாட்டில் கூடியிருந்த மக்கள், கலகலவெனச் சிரித்தார்கள்!!

கனவான்கள் போட்டியிட்டுக்கொண்டு காங்கிரசுக்கு நிதி உதவ 'நீ, நான்' என்று முன் வருகிருர்களே, அதை விளக்கவே இந்த உதாரணத்தைச் சொன்னுர். கற்புள்ள பெண்ணுக இருந்தால், 'போடா, போ!' என்று நோட்டை வீசி முகத்தில் எறிவாள்! காங்கிரஸ் பெண், அந்த நிலையில் இருக்கிருள் என்று கூறத்தக்க அளவில் நிகழ்ச்சிகள் இல்லை. காங்கிரஸ் கட்சியின் தேர்தல் நிதிக்கென்று சமீபத்தில் டாடா கம்பெனியினர் பல இலட்சங்கள் கொடுத்ததாகச் செய்தி வந்தது! 'இது தவறு' என்று பம்பாய் உயர்நீதி மன்றத்தினர் கண்டித்ததாகவும் செய்தி கண்டோம்!! சென்ற இரு கிழமைகளுக்குமுன், இதே டாடா கம்பெனியாரின் பிரிவான டெல்கோ எனும் பெயர்கொண்ட இரயில் என்ஜின் சாமான் செய்வோர், எப்படி இந்தியசர்க்காரை ஏமாற்றியிருக்கின்றனர் என்று, டில்லிப் பார்லிமெண்டில் பிரோஸ்காந்தி என்பார் பேசிஞர். பிரோஸ்காந்தி, ஒரு ஏனோதானோ அல்ல! எதிர்க் கட்சிக்காரருமல்ல! காங்கிரஸ்காரர். —ஆசிய ஜோதியாம் நேரு பண்டிதரின் அருமைத் திருமகள் இந்திராவின் கரம்பிடிக்கும் பாக்கியம பெற்றவர்-நேருவின் மருமகப் பிள்ளை. அவர் வெளியிட்டார், டாடா கம்பெனியார், சர்க்கார் மூலம் ஐந்து கோடி ரூபாய் வசதி பெற்றதாக! அதுவும் எப்போது? ஆடுவோமே — பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம்

**அரங்கண்ணல்**

அடைந்துவிட்டோமென்று' கோகிலகான இசைவாணி பாட' குமாரி கமலாக்கள் நடனம் ஆட, கோட்டை கொத்தளங்கள் மீதெல்லாம் மூவர்ணக் கொடி பறக்க, கொட்டு முழக்கும், வேட்டுச் சப்தமும் நாடெங்கும் கேட்க 1947 ஆகஸ்டு 15ம் தேதியன்று, வெள்ளையன் அதிகார மாற்றத்தை அளித்தானே; அது நிகழ்ந்த ஐந்தே ஐந்து நாட்களுக்கெல்லாம்—ஆகஸ்டு 20ந் தேதியன்றே—டாடாவின் திருவிளையாடல் ஆரம்பமாகிவிட்டதாம்!

இரயில்வேக்கு என்னென்ன சாமான்கள் வாங்கலாம் என்று நிர்ணயிக்கும் பொறுப்பிலுள்ள இரயில்வே போர்டு, டில்லியிலிருந்த சர்க்காரின் 'ரிகார்டுகளை', 'போர்ஜரி' செய்ததாம்!! 1945-லிருந்தே, இந்தக் கம்பெனியில் இந்திய சர்க்கார் சாமான்கள் வாங்கி வருவதாக 'திரிசமன்' செய்யப்பட்டதாம். உண்மை அதுவல்ல! என்ருலும் டெல்கோ கம்பெனி, 1945 முதல் 'சப்ளை' செய்வதாகக் கணக்குக்காட்டி, தான்தான் இரயிலுக்கு வேண்டிய பாய்லர் போன்ற சாமான்களுக்குப் பிரதிநிதி என்று நிரூபித்துக் கொண்டதாம். அந்தக் கட்டம் முடிந்ததும், சுதந்திர இந்தியாவில் இரயில்வேக்கு வேண்டிய சகல சாமான்களையும் செய்யவேண்டியிருப்பதால், எங்கள் தொழிற்சாலையை விரிவுபடுத்தப்போகிருேம், கொஞ்சம் நிதி உதவி தேவை என்று சொல்லி ரூபாய் 5 கோடிக்கு மேல் பணமும் பெற்றுக்கொண்டதாம். ஆரம்பமே, திருடு! அதைக் கண்டுபிடிக்கவில்லை, ஏழை பங்காளரான சர்க்கார். எப்படி இயலும்? கேட்பதற்கு முன்பே, 'மைனர்' நோட்டையல்லவா அள்ளி அடிக்கிருர், கட்சி நிதிக்கு! ஆதலால் டில்லி சர்க்காரும், வாய்மூடிபாராமுகமாய் இருந்துவிட்டனர். பிறகு, நிதி உதவி கேட்டனர்—அதையும் தந்தனர். ஆனல், எதற்காக நிதி உதவியென்று பெற்றனரோ, அதற்கு அந்தப் பணத்தை உபயோகிக்காமல், வேறு வேலைகளுக்குப் பயன்படுத்திக் கொண்டனராம் டெல்கோ கம்பெனியினர்! இதனல் சரியாக இரயில்களுக்குத் தேவையான சாமான்களும் கிடைக்கவில்லையாம்!!

"யார் வீட்டுப் பணம், இது? ஏழை மக்கள் தரும் வரிப்பணமல்லவா! இது இப்படியா கரியாக வேண்டும். உபயோகமில்லாத ஒரு கம்பெனிக்கு, ஏன்

**இத்தனை கோடி கொடுக்க வேண்டும். இதுசம்பந்தமான விபரங்களை அறிய, மனம் குழம்புகிறது — சித்தம் சோர்வடைகிறேன் — திகைப்பும் வேதனையும் பரவுகிறது**", என்று கர்ச்சித்திருக்கிறார் பிரோஸ் காந்தி.

இது ஒரே ஒரு சம்பவம்! இதுபோல், டாடாவினர், இன்னும் என்னென்ன வகைகளில், ஏதேது செய்திருக்கிறார்களோ, யார் கண்டார்கள்?

*

"டாடாவா? எவ்வளவு தேசிய உணர்ச்சி கொண்டிருக்கிறார் தெரியுமா. எங்கள் நேரு பம்பாய்க்குப் போனால், தங்குவதும், இளைப்பாறுவதும் மலபார் ஹில்சிலுள்ள டாடாவின் மாளிகையில்தான."

"பிர்லா, பெரிய பிரபுதான்! ஆனால் அவர் மனது யாருக்கு வரும்? கடைசி வரையில் காந்தியடிகள் தங்குவதற்கு டில்லியில் உள்ள தனது மாளிகையையே தந்திருந்தார்!!"

"டால்மியா... அவருடைய தேசியப்பற்று யாருக்கு வரும்? டைமஸ் ஆப் இந்தியா எனும ஆங்கில ஏட்டையே காங்கிரசுக்கன்றோ தத்தம் செய்துவிட்டார்! காங்கிரசு செய்திகளன்றி வேறேதும் வராது தெரியுமோ அதில்?"

இவ்விதம் கூறிக் கூறிப் புளகாங்கிதமடைந்தனர், தேசியத் தோழர்கள். டால்மியாவின் சாயம் வெளுத்தது—மூன்று கோடியை ஏப்பம் விட்டதாக வழக்கு நடக்கிறது நீதி மன்றத்தில். இப்போது டாடாவின் பார்வையிலுள்ள கம்பெனி, ஒரு பக்கம் காங்கிரஸ் கட்சிக்கு இலட்சக் கணக்கில் பணத்தை நீட்டிவிட்டு, இன்னொரு பக்கம் கோடிக் கணக்கில் சர்க்காரிடமிருந்து 'பிரதி பலன்' பெற்றிருக்கிறது என்பதை நேருவின் மருமகனார், தெரிவிக்கிறார்.

பெண்ணுக்கு, 'பஸ்' ஏறச் சென்ற மைனர், நோட்டை நீட்டிய உதாரணம், பொருத்தமதானே! இன்று நேற்றல்ல, சுதந்திரம முகிழ்த்த நாள் முதல் நாம சொல்லிவருகிறோம்; '**வெள்ளைக்காரன் கையிலிருந்து அதிகாரத்தைப் பிடுங்கி, தேசீய பக்தர்கள் வசம் கொடுத்துவிட்டு, வடநாட்டு முதலாளியும் வெளி நாட்டு முதலாளியும் கூட்டாகச் சேர்ந்துசுரண்டத்திட்டம்போடுகின்றனர்**' என்று. போருக்குப பின், இந்திய உபகண்டத்துக்கு, இவ்வளவு விரைவில் அதிகார மாற்றம் உண்டாவதற்கு இதுவும் ஒரு காரணம் என்றோம்! ஆனல் காங்கிரஸ் அன்பர்கள், "பார், பார்! இவர்கள், நம் தியாகத்தை மாசுபடுத்துகிறார்கள். நமக்குப் பயந்து வெள்ளையன் ஓடினான் என்பதை ஒப்பவும் மறுக்கிறார்கள். முதலாளிகள் என்ன செய்துவிட முடியும் நேருவை? அவர் மார்க்சீயத்தைக் கரைத்துக் குடித்தவர்! முதலாளித்துவத்தின் முதுகெலும்பை ஒடிக்கப்போகிறார்-கள்ள மார்க்கட்காரர்களை, கழுவிலேற்றுவேன் என்று கர்ச்சித்தவரா, பண முதலைகளுக்குப் பணிவார்", எனறனர்.

களம் பல கண்டும், குண்டுகள் ஏந்தியும், தடியடி தாங்கியும், தண்டி யாத்திரை நடத்தியும், உப்புச் சத்யாக்கிரத்தி லீடுபட்டும, நாட்டின் சுதந்திரத்துக்காக தியாகம் பல புரிந்த உத்தமர்கள், நம் மீது ஆத்திரப்பட்டதில் தவறு இல்லை. அவர்கள், சுயராஜ்யம், சுகராஜ்யமாக அமையும் என்று எதிர்பார்த்தனர். சுதந்திர மண்டபத்தில், விடுதலைத் தேவி வீற்றிருக்கப் போகும் அழகையும்—தடி தூக்கித் தர்பார் நடாத்தியோரெல்லாம் தாசர்களாகக் கை கட்டி நிற்கும் காட்சியையும் — சிறைவாசமும் தியாகமும் ஏற்ற தலைவர்கள் ஆட்சி மன்றத்தில் அமர்ந்திருக்கும் நேர்த்தியைப்பற்றியும், எண்ணி யெண்ணி இறுமாந்து இருந்த நேரம அது. "எட்டிப் பார்க்கிறான், கள்ளன்! வெண்சாமரம் வீசும் உருவில் வருகிறான் என்று நாம் உரைத்தது, அப்போது, அவர்களுக்கு நாராசமாகப் பட்டது.

ஆனல், இந்தப் பத்தாண்டுக் காலத்தில் என்ன கண்டோம்? டாடாவும் பிர்லாவும் அடிக்கடி வெளி நாடுகளுக்குப் பறக்கிறார்கள்—ஏன்? — இந்தியாவின் தொழிலபிவிருத்திக்காக!

**சென்ற ஆண்டு தனது எஃகு ஆலை அபிவிருத்திக்காக அமெரிக்க முதலாளிகளிடம் சுமார் 50-கோடி ரூபாய் சொந்த முறையில் டாடா பணம் பெற்று வந்தார் என்பது யாவருக்கும் தெரியும்.**

அவரைப் போன்ற, வடநாட்டு முதலாளிகள் எல்லாம், தத்தமது வாய்ப்பு வசதிக் கேற்றபடி வெளி நாட்டார் துணையுடன், ஆங்காஙகே ஆலைகளை அமைததுக்கொண்டிருக்கிறார்கள். ஜெர்மன் கம்பெனியும் இந்தியக் கமபெனியும் சேர்ந்து—ஜப்பான் கம்பெனியும் இந்தியக் கம்பெனியும் சேர்ந்து—கனடாவும் இந்தியாவும்—சுவிசும் இந்தியாவும்...... இப்படி, இந்தப் பத்தாண்டுக்குள் பல கமபெனிகள் முளைத்திருக்கின்றன!

**இப்போது, இந்திய பணமுதலைகளும் —வெளிநாட்டு முதலாளிகளும் சேர்ந்து சுரண்டுவது தாராளமாக நடக்கிறது.**

**இது போதாதென்று இன்னும் பல சலுகைகளை அறிவிக்கிறார், நேரு, வெளி நாட்டினருக்கு — போட்ட முதலுக்கு இலாபத்தை நீங்கள் கொண்டுபோகலாம்! உங்களை விரட்டமாட்டோம் என்கிற உறுதிமொழி அளிக்கிறோம்! என்றெல்லாம்.**

கேட்டால், இந்தியாவின் தொழில் வளர்ச்சிக்கு இந்த ஏற்பாடு முக்கியம் எனபார், நேரு.

இதனல்தானே, இந்தியாவுக்கு ஏற்றது, "மாடல் சோஷியலிசம்" என்றேன் — Co-Existence (சேர்ந்து வாழும் முறை) தேவையென்பதற்கு அர்த்தம் இதுதான் என்றெல்லாம் விளக்கமும தருகிறார் அடிக்கடி.

வீரர் அவர்! சமதர்ம முறைகளில் தீரரும் கூட! — ஆனல். என்ன செய்வது? நோட்டை நீட்டுகிறானே என்று கையை நீட்டிவிட்டாரே! மைனரின் இஷ்டப்படி நடக்கவேண்டிய நெருக்கடிக்கு தன்னை ஆளாக்கிக்கொண்டு விட்டாளே மங்கை!!

*

இதன் விளைவாக சுதந்திரம் முகிழ்த்ததுமே, இந்தியாவின் தேவைகளுக்கு வெளிநாட்டினர் உதவி அவசியம் என்று கூறப்பட்டது. பிர்லாவும் டாடாக்களும் பலமாக வாதிட்டார்கள். நேருவும், அமெரிக்காவுக்கு, 'விஜயம்' செய்தார் — அணைகள் கட்ட — கால்வாய் வெட்ட — உணவு உற்பத்தியைப் பெருக்க என்றெல்லாம், பணம் கேட்டார். அமெரிக்காவும் தாராளமாக வழங்கியது.

அப்போது நேரு, அமெரிக்காவின தாசர்! டாலர் ஏகாதிபத்தியத்தின் செல்லப்பிள்ளை! — கம்யூனிஸ்டுகளின அகராதிப்படி.

நேருவும், கம்யூனிஸ்டுகளை ஒடுக்கப் பினவாங்கவில்லை. தெலிங்கானு—தஞ்சை—நடந்தது. பலர், சுட்டுக் கொல்லப்பட்டனர்! கம்யூனிஸ்டுக் கட்சியையே தடை விதித்து பலரை விசாரணையின்

றியே சிறையிலும் பூட்டி வைத்தார்!! *

அப்போது அமெரிக்கா, நேருவுக்கு, ஆரத்தியெடுத்தது — அன்பா! நண்பா! ஆசிய மணியே! அருமருந்தே என்றெல்லாம் புகழ்மாலை சூட்டியது. வாஷிங்டனுக்கும் நியுயார்க்குக்கும் அழைத்துப்போய் புகழ் மாலையும் விருந்தும் அளித்தது.

இந்திய முதலாளித்துவம் அமெரிக்க முதலாளித்துவத்தைப் பார்த்துச் சிரித்தது! இரண்டும் சேர்ந்துகொண்டு நேருவுக்கு 'லாலி' பாடின.

இதே நிலைமை நீடிக்கும்—இந்தியாவை எப்போதும் நமது தாசனாகவே வைத்துக்கொள்ளலாம் என்று அமெரிக்கா எண்ணிற்று. நேருவும், என்ன செய்திருக்கக்கூடும். மனம்ஓரோர் சமயம் உறுத்தினாலும், வேறு வழியில்லாததால் வலையிலேயே உழன்றிருக்கக்கூடும்.

ஆனால் உள்நாடு, அவர் போக்கை அனுமதிப்பதாயில்லை. அங்குமிங்கும் அவர்மீது கண்டனங்கள் குவியலாயின—பக்கத்து நாடு சீனாவைக் காட்டிப் பலபேர் பேசலாயினர் — அப்போது நடந்த பொதுத் தேர்தலிலும் ஆந்திரா — தமிழகம் கேரளம் — வங்கம் போன்ற பல இடங்களில், தான் அடக்கிவைத்திருந்த 'செங்கொடி'யினர்வெற்றி பெற்றது தெரிந்தது. மிரட்சி, அரும்பிற்று. ஏதேது, இப்படியே போனால், முடிவு என்னாகுமோ என்கிற கவலையில், புது 'வித்தை' புரிய நினைத்தார்.

டிட்டோ, அழைக்கப்பட்டார்.

குருஷேவும், புல்கானினும் கொண்டு வரப்பட்டனர்.

சூ-என்-லாய்க்கு வரவேற்புகள் வழங்கப்பட்டன.

கலைத்தூது — பார்லிமெண்டு தூது — அன்புப் பயணம்—இப்படி ஏற்படலாயின, ரஷ்யாவுக்கும் சீனாவுக்கும். நேருவுக்கு, உள்நாட்டில், இது செல்வாக்கைப் புதுப்பிக்கலாயிற்று—ஏசிய கம்யூனிஸ்டுகள் கூட, "சமாதானத் தூதர்! ஆசியாவின் காவலர்!" என்று அர்ச்சிக்கலாயினர்.

இந்திய ஸ்டாலின் — என்றும் இங்குள்ளவர்களால் கருதப்பட்டார்! சீனாவுக்கு மாசேதுங்போல, இந்தியாவுக்கு நேரு, என்றும் போற்றலாயினர்!!

இவைகளைக் கண்ட அமெரிக்கா, மிரண்டது — நேருவோ, அதே சமயத்தில் அமெரிக்காவையும் இழக்க விரும்பாததால் 'Co-existence'பற்றி விளக்கஆரம்பித்தார் — மாடல் சோஷியலிசம் பேசினார் — இந்திய முதலாளிகளுக்கு நம்பிக்கையூட்டுவதற்காக 'தொழில்களைத் தேசியமயமாக்க மாட்டேன்;' என்று உறுதியளித்தார் — உமமை விட்டோடமாட்டேன் என்று மைனருக்கு உறுதி தரும்மங்கையைப்போல! எனினும் அமெரிக்கா, பாகிஸ்தான் பக்கம் கண்களைச் சாய்த்தது! தனது படை வரிசைகளில் ஒரு நாடாக அதனை ஆக்கிக்கொண்டது!!

பாகிஸ்தான். இப்போது அமெரிக்காவின் உதவியிருக்கிறதென்கிற தைரியத்தில் காஷ்மீரைப் பெற்றுவிடலாம் என்கிற கட்டத்துக்கு வந்திருக்கிறது.

இது ஒரு பக்கம், நேருவுக்கு எரிச்சலாயிருக்க, அதே சமயத்தில் போட்டுவிட்ட இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்துக்கு இன்னும் 700-கோடி ரூபாய் வேண்டுமென்கிறார், நந்தா.

புதிய வரிகளோ போட முடியாது.

திட்டத்தைக் குறைக்கலாமென்றாலோ — அதுபற்றி வானளாவப் பேசி, கீதம்பாடி, படம் காட்டியாயிற்று.

என் செய்வது?

இந்தநிலைமையில்தான் சென்ற திங்கள், இந்திய முதலாளியும், காங்கிரசின் பால் அன்புகொண்டவராகக் கருதப்படுபவர்களுள் முக்கியமான வருமான பிர்லாவை நாடிற்று, டில்லி. மைனர், மங்கைக்கு வலைவீசிய கட்டம் மாறி, மங்கையே மைனரைத் தேட வேண்டிய நெருக்கடி பிறந்தது!! பிர்லாவை அமெரிக்காவுக்கு அனுப்பி '700 கோடி கிடைக்குமா' என்று ஆழம்பார்க்கச்சொன்னது டில்லி.

இந்தியாவில்போடும் முதலுக்கு நல்ல லாபம் வரும் என்பதை பிர்லா மூலம் விளக்கப்பட்டது. பிர்லாவுக்கென்ன நஷ்டமா! அமெரிக்கா பணம்கொடுத்தால், அதில் கொஞ்சம் வாங்கி, "டெல்கோ' அமைத்ததுபோலதான் ஒரு 'பில்கோ' அமைக்கலாமல்லவா! அதனால் அவரும்போய் அங்கிருந்து கொண்டு தகவல் அனுப்பியபிறகு, ஆஜானுபாகுவாய், ஆடம்பரதாரியாய், தனது 'பைல்' கத்தைகளுடனும், பரிவாரங்களுடனும் டில்லி நிதிமந்திரி கிருஷ்ணமாச்சாரியார் சென்றிருக்கிறார், அமெரிக்காவுக்கு! நிதம் நிதம், அவர் யாரைப் பார்த்தார், என்ன பேசினார் என்கிற செய்திகள் வருகின்றன ஏடுகளில்!!

•

இப்படி அல்லாடவேண்டிய நிலைக்கு ஏன் வரவேண்டும் நமது சுயராஜ்யம்? 'மைனர்' தரும் பணமா தேவை! அதைக்கொண்டு சீவி முடித்துச் சிங்காரித்து, பூ வைத்துப் பொட்டிட்டு, குலுக்கி மினுக்குவதைவிட, கிடைத்ததைத்தின்று, மெள்ள மெள்ளத் திட்டம்போட்டு செயலாற்றலாமே!!

சிக்கிக்கொண்டுவிட்டார் நேரு—வெளிநாடுகளுக்கு ஓடியாவது பணம் கொண்டுவந்து, காரியம் செய்ய நினைக்கிறார். டாடாவும் பிர்லாவும், அமெரிக்காவைக் காட்டுகிறார்கள்! சரி — எனகிறார், டி. டி. கே. யை அனுப்புகிறார் பணத்துக்கு!!

தொழிலாளர்களையும் முற்போக்குவாதிகளையும் 'தாஜா' செய்யவேண்டுமே, அதற்காக, ரஷ்யா, சீனா — புல்கானின் குருஷேவ், மாசேதுங், என்கிறார்!

டி. டி. கே. அமெரிக்கா சென்று ஐசனோவரின் தூதரைச் சந்திப்பதும், அமெரிக்காவை விட்டால் வேறு வழியில்லை என்று பேசுவதுமாகயிருக்கிற இதே சமயத்


**வறுமைப் பேய்**

அல்லது

**வாலிப ஜமீன்தார்**

என்னும் சமுதாய நாடகம்

ஆசிரியன்: ஏ. அரங்கநாதன்

முகவுரை: அறிஞர் அண்ணா.

விலை ரூபாய் இரண்டு

கிடைக்குமிடம்:- பாரி நிலையம்

133, பிராட்வே, :-: சென்னை-1.

தில், நேரு பண்டிதரின் வேண்டுகோளின்பேரில், இந்தியக் குடியரசுத் துணைத்தலைவர் டாக்டர் ராதாகிருஷ்ணன் எங்கேபோயிருக்கிறார் தெரியுமா? செஞ்சீனாவின் தலைநகராம் பீகிங்கில், சீனர்களின் திறமைபற்றியும், மாசேதுங்கின் அருமை குறித்தும், விருந்து அருந்தியபடி பேசிக்கொண்டிருக்கிறார்!!

இருமுகம்—ஒன்று அமெரிக்கா பக்கம்! இன்னொன்று சீனாவில்!! ஒன்று முதலாளிகளுக்காக! இன்னொன்று முற்போக்குவாதிகளுக்காக!!

இதுதான், நேரு கண்டுபிடித்த "மாடல் சோஷியலிசம்".

அமெரிக்காவுக்கு டி. டி. கே. 700 கோடி நாடிவந்திருக்கிறார் எனக் கண்டதும், பாகிஸ்தானின் ஐ. நா. சபைப் பிரதிநிதியாகயிருக்கும் பிரோஸ்கான் நூன், ஒரு குண்டு போட்டிருக்கிறார், அமெரிக்க சர்க்காரைப் பார்த்து, "**இந்தியாவுக்கு, அமெரிக்கர்களே, உதவாதீர். இந்தியாவுக்கு உதவினால் அது பலம் பெற்று பிறகு எமது பாகிஸ்தானையே தாக்கும். ஆகவே, நீவிர் உதவியளிப்பின் பாகிஸ்தானுக்கு கேடிழைத்தது போலாகும்,**" என்று.

இந்தக் கூக்குரலைக் கேட்டதும்' கிருஷ்ணமாச்சாரியாருக்கும், அமெரிக்காவிடம் பணம் கேட்க தானும் ஒரு காரணம் சொல்ல வேண்டிய அவசியம் வந்து, '**நியுயார்க் டைம்ஸ்**' நிருபரிடம் சொல்லியிருக்கிறார்.

"**நாங்கள் ஏன் பணம் கேட்கிறோம் தெரியுமோ? கம்யூனிசத்தை ஒழிப்பதற்காக! இன்றில்லாவிட்டாலும் ஒரு நாளைக்கு எங்களூர் எஸ். ஏ. டாங்கே (இந்திய கம்யூனிஸ்டுத் தலைவர்)-க்கு ரஷ்ய உதவி கிடைத்து, தான் புரட்சி செய்யப் போகிறேன் என்று கிளம்பினால், உங்களிடமிருந்து உதவி வரும் வரையில் நாங்கள் சமாளித்துக்கொள்ள வேண்டுமல்லவா? அதற்குக்கூட வழியில்லாவிட்டால், இந்தியாவே கம்யூனிஸ்டுகள் கையில் போய்விடுமே. அதைத் தடுக்கப் பணம் கொடுங்கள்**"

எரிந்த கட்சி, எரியாத கட்சி' இலாவணிபோல நடக்கிறது அமெரிக்காவில்; இது சமயம், பிரச்சாரம்.

பாகிஸ்தான், கொடாதே, என்கிறது! டில்லி, "கொடு; கம்யூனிசத்தை ஒழிக்கவேண்டும்", என்கிறது!!

கேரளத்தில் கம்யூனிஸ்டுஆட்சி எப்படி ஏற்பட்டது தெரியுமா?—அங்கே அபிவிருத்தி செய்ய எங்களிடம் பணமில்லை! நீங்கள் பணம் கொடுக்காவிட்டால் இந்தியா முழுமையும் கம்யூனிசமாகிவிடும்—என்று கிருஷ்ணமாச்சாரியார் வெளியிடுகிறார், அமெரிக்காவில்!

சீனாவில் டாக்டர் இராதாகிருஷ்ணனே, "**மாசேதுங்கும் அவரது சகாக்களும் சீனாவை, சுயமரியாதை மிகுந்த நாடாக ஆக்கிவிட்டனர். பிறரை எதிர்பார்த்து வாழவேண்டிய அவசியத்தில் இல்லாதவாறு முதுகெலும்புள்ளதாக்கிவிட்டனர்,**" என்று புகழ்கிறார்! மாசேதுங்கை ஒரு விருந்தில் நோக்கி, "மாசேதுங் அவர்களே! நீங்கள் நீண்ட காலத்துக்கு இன்றுபோல் ஆட்சியிலமர்ந்து சீனாவை நடத்திச்செல்ல வேண்டுமென்பது இந்தியாவிலுள்ள எங்கள் ஆசையாகும். இந்த மனிதத் திருப்பணி செவ்வனே நடக்க வாழ்த்துகிறோம்," என்று புகழ் பாடியிருக்கிறார்.

நேருவால் கம்யூனிஸ்டு நாட்டுக்கு அனுப்பப்பட்ட துணைத் தலைவர், 'துயர் துடைப்பவர்!' என்று மாசேதுங்கைப் போற்றுகிறார்! நிதிமந்திரியோ, அமெரிக்காவில், 'கம்யூனிசத்தை ஒழிக்கப் பணம் கொடு' என்று கேட்கிறார்!!

டி. டி. கே. இப்படி வெளிப்படையாகப் பேசியது, நேருவுக்குக் கலக்கத்தைக் கொடுத்துள்ளதாம்—டில்லி 'மெயில்' நிருபர் தெரிவிக்கிறார்.

இதுதான் Co-existence-என்று கூறவாமுடியும்? குருஷேவ் காதில, டி. டி. கே. பேச்சு விழுந்தால் என்ன எண்ணுவார்! ஐசனோவர், துணைத் தலைவர், கம்யூனிச நாட்டுக்கு வழங்கிய வாழ்த்தைக் கேள்விப்பட்டால் என்ன நினைப்பார்!!

இப்படி, 'மாடல் சோஷியலிசம்' அல்லாடுகிறது—மானம், பறிபோகிறது, வெளிநாடுகளில்.

ஏனிந்தச்சங்கடம் வரவேண்டும் நேருவுக்கு? Co-existence--மாடல் சோஷியலிசம்—என்கிற புதுப் புது வார்த்தைகளையெல்லாம் கண்டுபிடித்து குழம்பிக்கொள்ள வேண்டிய அவசியம் என்ன வந்தது? வேறெதுவுமில்லை! இந்திய முதலாளித்துவத்துக்கு, அவர் நல்ல பிள்ளையாக விளங்க விரும்பியதன், விளைவுதான் இதெல்லாம்.

கஞ்சியோ, கூழோ குடித்துக் கொண்டு கிடப்பதைவிட்டு, கையேந்த ஏன் கிளம்பவேண்டும் அந்த மங்கை! அப்படிக் கிளம்பியவளாவது, கண் ஜாடை காட்டுபவனிடம் ஏன கையை ஏந்தியிருக்க வேண்டும்? ஏந்தினாள்! அவன் எடுத்து நீட்டினான நோட்டை—ஜாடை காட்டினான்—சாய்ந்தாள், பிறகு, கணவன் ஞாபகம் வந்தது, கட்டியவனைவிட்டால் ஊர் தூற்றுமே! காசு கொடுத்தவனையும் திருபதிசெய்யவேண்டும்—கணவனுக்கும் நல்லவளாக வேண்டும் என்றால் முடியுமா? இரண்டுக்குமிடையிலே மாட்டிக்கொண்டு விழிக்கிறாள் மாது! முதலாளிகள் இஷ்டப்படி நடந்தாலோ, மக்கள் 'ஓட்டு' அளிக்கமாட்டார்கள்—மக்களுக்காக முதலாளிகளையும் விரோதித்துக்கொண்டால் 'கட்சி' நடத்த காசுவேண்டும்—ஆகவே, ஓட்டுக்கும் ஓட்டு, பணத்துக்கும் பணம், என்று 'இருமுகம்' தாங்கிட நேர்ந்தது. நேரம் கழித்து வந்தால் கொண்டவன் கோபிக்கிறான்! நேரத்தில் போகாவிட்டாலோ காசு கொடுத்தவன் ஏசுகிறான்!!

அவன் காசு வேண்டாம் என்று கூறிடவோ, காதுக் கம்மலும், கண்டாங்கி சேலையும், முகத்துப் பவுடரும், மூக்குத்தி அழகும், விட மறுக்கிறது. எனவே, சமயம் நேர்ந்தபோது கணவனையும் கொஞ்சுகிறாள்—காசு தேவைப்படுகிறபோது 'மைனரையும்' நாடி ஓடுகிறாள்!!

இந்த வெட்கக்கேட்டுக்கு ஆளாகியிருக்கிறது, சுதந்திரபூமி.

விழியை வீசிய மைனருக்கு, அப்போதே புத்தி வரச் செய்து இருக்கலாம்.

துணிவில்லை—இன்று துயரம் மோதுகிறது—யாருக்கு நல்ல பிள்ளையாக நடப்பது என்று திண்டாடுகிறது, இந்திய அரசு.

பரிதாபம் தான்!

★

"என்ன மணிமுடி! ஆளைப் பார்ப்பதே அபூர்வமாகிவிட்டதே ...கழக வேலைகள் அதிகமோ..."

"வரவர அதிகமாகிக்கொண்டு தான் போகின்றன பெரியய்யா! வடார்க்காடு மாவட்டத்துக்குப் போயிருந்தேன்..."

"மாநாட்டுக்குத்தானே?"

"ஆமாம்!"

"நான்கூட வர இருந்தேன், மணிமுடி — உடம்பு, சரியில்லை. ஆமாம்! மாநாட்டில் கலியாணம் கூட நடைபெற்றதாமே..."

"ஆமாம், பெரியய்யா! இராசாங்கம் என்பவருக்கும் சந்திரா அம்மைக்கும் மாநாட்டு மேடையிலேயே,திருமணம் நடைபெற்றது"

"குழந்தைக்குப் பெயரிடுதல் கூட நடந்ததாமே..."

"ஆமாம்! ஒரு தோழரின் பெண் குழந்தைக்கு இராணி என்று பெயரிட்டார், அண்ணா."

"கலியாணம்! பெயர்வைத்தல்! —மாநாடு என்றாலே, பெரியதோர் விழா மாதிரி இருக்கும் போலிருக்கிறதே..."

"அப்படித்தான் பெரியய்யா! திராவிட முன்னேற்றக் கழகம் என்கிற குடும்பத்திலே நடக்கிற விழாப் போல இருக்கிறது. எவ்வளவு ஆனந்தமாக உள்ளது தெரியுங்களா — நண்பர்களைப் பார்க்கவும், தோழர்களைச் சந்திக்கவும்..."

"புரட்சி நடிகர் நாடகங்களுக்குச் சொல்லமுடியாத கூட்டமாமே..."

"அதையேன் கேட்கிறீங்க! இன்பக் கனவையும், அட்வகேட் அமரனையும் எவ்வளவு ஆர்வத்தோடு மக்கள் பார்த்தாங்க..."

"அனீபா வந்திருந்தாருன்னு கூடக் கேள்விப்பட்டேன்..."

"ஆமாம்! அந்த வெங்கலக் குரலோன், அடடா, என்னமா பாடினார் தெரியுங்களா? நித்தியானந்தம் எனும் தோழர்கூட நன்றாகப் பாடினார்..."

"பாட்டு—நாடகம்—பேச்சு, முத்தமிழும் முழக்கிற்று, இல்லையா?"

"ஆமாம்! முத்தமிழ் மட்டுமல்ல —கன்னடமும் கனிதெலுங்கும் கவின் மலையாளமும் கூட முழங்கிற்று..."

"என்ன?"

"ஆமாம் பெரியய்யா! கன்னட மொழியில் பெங்களூர் பதி பேசினார்... மலையாளத்தில் கே. எச். எம். சுபேர் எனும் தோழரும், தெலுங்கில் பி. எம். கருணாகரன் என்பாரும் எழுப்பிய முழக்கம் இருந்ததே,



# சாவடி

'ஒற்றன்'

போங்க பெரியய்யா, நீங்க வந்திருக்கவேண்டும்..."

"அதான் வரமுடியாமப் போச்சே! எப்படிப் பேசினாங்க, அவுங்க..."

"பேசினாங்களா? முழக்கினாங்கன்னு சொல்லுங்க! வீரமும் விவேகமும் கொண்டு அவர்கள் பேசியபோது, பந்தலே அதிர்ந்தது கைதட்டுதலால்..."

"பேச்சு புரியுதா!"

"இந்தியைப்போலவா இவை? புரியலேன்னாலும், என்ன பேசறாங்கன்னு தெளிவாத் தெரிஞ்சிக்க முடியுது......ஒரோர் சமயம் நம்ப தமிழ் போலக்கூட இருந்தது..."

"ஆமாமாம்! மலையாளமும், கன்னடமும், தெலுங்கும் நம்ப அண்ணன் தம்பிங்க போலத் தானே......ஆமாம், அங்கேயெல்லாம் கழகத்தை வளர்ப்போம் என்று சொன்னாங்களா?"

"சொல்லணுமா! என்ன ஆர்வமாயிருக்காங்க தெரியுமா? உள்ளபடி, ஆந்திரர் ஆதரிக்கிறார்களா, கேரளர் கேட்பார்களா, கன்னடர் கருதுவார்களா... என்று கேட்கிறவர்களுக்கு, பதிலளிப்பதுபோல இருந்தது. இப்படிப் பேசுகிற ஒரு ஏழெட்டுப் பேர் கிளம்பி, அந்தந்த வட்டாரத்திலே சுற்றக் கிளம்பிவிட்டால், கழகக் கொள்கைகள் பரவிடும் நாள் வெகு தொலைவில் இல்லை"

"முக்கியமான முடிவு என்ன மணிமுடி..."

"இந்தியைப் பற்றித்தான் பெரியய்யா! இன்னொரு '1938' கூடிய சீக்கிரம் ஏற்படும்போலிருக்கு..."

"ஆமாமா! இந்தத் தடவை போராட்டம் வந்தால், நான் கூடக் கலந்துகொள்ளப்போகிறேன்..."

"நீங்ககூடவா?"

"ஏன் மணிமுடி? எனக்கு மட்டும் நல்ல காரியத்திலே ஈடுபடணும்கிற ஆசையிருக்காதா?"

"பெரியய்யா! உங்களைப்போல, வயசானவங்கள்ளாம்கூட, ஏராளமா வந்திருந்தாங்க மாநாட்டுக்கு..."

"எனக்கே வரமுடியாமப் போனது பற்றி எவ்வளவோ வருத்தமாயிருக்கு! இதிலென்ன ஆச்சரியம் மணிமுடி.........நீங்க சொல்றது, செய்றது எல்லாம் தப்புன்னு நான்கூட ஒரு காலத்திலே நினைச்சுகிட்டுத்தானிருந்தேன். இப்பவல்ல தெரியுது... உண்மையிலே, உங்களாலேதான் நம் நாட்டுக்கு வாழ்வு வரணும்..."

"வர்ரேன், பெரியய்யா!"

"எங்கே மணிமுடி?"

"வருகிற 29—9—57 அன்று கே. வி. கே. சாமி நினைவு நாள் கொண்டாடணும்..."

"ஊம்! எவ்வளவு அருமையான ஆள்..."

"நினைச்சா மனம் 'பகீர்' என்கிறது பெரியய்யா! என்ன செய்றது? வர்ட்டுமா? சாமிபோன்றவங்க இல்லாத குறையை நாங்கதானே நிரப்பணும்...?" ★

# குன்றோரம்

[ கண்டு வந்தோன் ]

"அதோ, வேகமாக நடந்து போகிறாரே அவர்தான் **ப. உ. சண்முகம்.** நடையிலே மட்டுமல்ல வேகம், தன் நடவடிக்கைகளிலும் கூட அப்படித்தான்."

"அவரைத் தெரியாதா! திருவண்ணாமலை என்றாலே ப. உ. ச. ஞாபகம்தானே வரும். அதிலும், தேர்தலிலே அவரும், அவர்கூட **நின்ற சந்தானமும்** 20,000 ஓட்டுகள் அதிகம் பெற்று, பெற்ற வெற்றி சாதாரணமானதா?"

"கையில் பையுடன் துரு துருவென்று ஓடிக்கொண்டிருக்கிறாரே அவர்தான் பார்லிமெண்டுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட **தர்மலிங்கம்.**"

"அவரா! எவ்வளவு ஆர்வத்தோடு பணியாற்றுகிறார்."

*

"தி. மு. க. மாநாடு என்றதும் என்னமோவென்று நினைத்தேன்!- இப்பதானே தெரியுது, ஏன், இவுங்களுக்கு இவ்வளவு கூட்டம் வருதுன்னு! என் பேரப்பிள்ளை கூப்பிட்டதும், அரை மனசோடேதான், வந்தேன். ஆனா, இனிமே இவுங்க மாநாடு எங்கே நடந்தாலும் சரி, போகாமல் இருக்கப் போகிறதில்லைங்க."

"அவுங்க சொல்றதிலே, ஏதாவது தப்புத் தண்டா இருக்கா பார்த்தீங்களா! நியாயத்தைத் தானே எடுத்துச் சொல்றாங்க— அதுவும், எவ்வளவு உருக்கத்தோடு சொல்றாங்க. நிசமா, இவுங்க கட்சி வளரணும்னு எனக்குக்கூட ஆசை வந்தாச்சு!"

* * *

வாலிப உலகுக்கோர் விருந்து! வயோதிகப் பெரியவர்களுக்கோர் விளக்க விழா!!—என்கிற வகையிலே, சென்றகிழமை திருவண்ணாமலையிலே நடைபெற்ற இரண்டு நாள் மாநாடுகளும் அமைந்திருந்தன. சட்டசபை உறுப்பினர்களான **ப. உ. சண்முகமும்,** வேலூர் **மா. பா. சாரதியும்,** செயலாளர்களாக இருந்து நடத்திய மாநாடுகளின் சிறப்பையும் பெருமையையும் எழுதவும் வேண்டுமோ? நாட்கள் கொஞ்சம்! எனினும் அழகான பந்தலும், வருபவர்களுக்கு வசதியும் செய்திருந்த நேர்த்தி சிறப்பாக இருந்தது. ஆண்டு மாண்டுபோன முத்தமிழ் வேந்தர்களின் நாடு, இன்று வெட்டவெளியாக இருப்பதை நினைவூட்டுவதுபோல, மாபெரும் மண்டபங்கள் கொண்ட பெரும் பெரும் சத்திரங்கள் பல உண்டு, அண்ணாமலையில். அவையனைத்தும் இதுவரை, தீபத் திருவிழா காண வந்தவர்களுக்கும், தீன தயாபரனைத் தரிசிக்க வந்தோருக்கும் பயன்பட்டன. ஆனால், இம்முறை, நாட்டில் 'தீபம்' ஏற்றிடும் திருத்தூதர்களாம் திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் உறைவிடங்களாக விளங்கின. ஆங்காங்கு கூடிக் கிடந்து அவர்கள் உரையாற்றியிருந்த காட்சி, களம் செல்லுமுன் ஒன்றுசேர்ந்து பாசறை வீரர்கள் தீட்டுவரே திட்டம், அதனை நினைப்பூட்டியது.

திருவண்ணாமலையெனின் பக்தர்களுக்கு ஓங்கி நிற்கும் குன்றும், அதன் உச்சியில் ஒவ்வோர் கார்த்திகையிலும் எரியும் விளக்குமே கவனத்துக்கு வரும். அதைக் கொண்டு, அந்த வட்டாரம் முழுதுமே, பழைமையும் பிற்போக்கு எண்ணமுமே அரசோச்சும் என எண்ணுவர், பிறர். ஆனால், சென்று திரும்பிய பிறகுதான் அறியமுடியும், அந்த வட்டாரத்தில் எவ்விதம் கழகம் வளர்ந்திருக்கிறது என்கிற உண்மையை! உழவர் பெருமக்கள், அருகிலிருக்கும் ஜவ்வாது மலை போன்றவைகளிலிருந்து வந்த ஆதிக்குடிகள், தொழிலாளர்கள், மாணவ மணிகள், தாய்மார்கள்—இப்படி, நாட்டின் நாடிநரம்புகள் எவரெவரோ, அவர்களனைவரும் கூடியிருந்தனர். குடந்தைப் பெரியவர் **கே. கே. நீலமேகம்** கூறினார் பெருமையுடன், "ஒவ்வொரு மாநாட்டுக்கும், தள்ளாத நிலைமையிலும், வந்துவிட வேண்டுமென்று ஆகிவிட்டது. வேறு எந்த வேலைத் தொல்லையிருந்தாலும், அவைகளையெல்லாம் அப்படியே போட்டுவிட்டு, கிளம்புகிற நிலைமை வந்துவிட்டது. வருகிற எல்லாத் தலைவர்களையும் ஒரே சமயத்தில் பார்க்கிறபோது சொல்லமுடியாத ஒரு ஆனந்தம் — கூடுகிற மக்களைப் பார்க்கிறபோது மனதிற்கோர் திருப்தி — இதெல்லாம் சேர்ந்து, ஏதோ நம் வீட்டிலே நடைபெறுகிற ஒரு நல்ல காரியம் என்கிற எண்ணம் உருவாகிவிட்டது எனக்கு", என்று. உண்மையும் அதுதானே! நாள்தோறும் கூட்டங்கள், நடைபெறுகின்றன ஒவ்வொரு ஊரிலும். ஆனால் மாநாட்டின்போதுதானே, எல்லா ஊர்த் தோழர்களும் ஒரே இடத்தில் கூடுகின்றனர். ஆற்காட்டில் ஏன் தோற்க நேர்ந்தது?—அடடா! வாணியம்பாடியில் தேர்தலில் என்னென்ன பாடுபட்டோம் தெரியுமா — ஆம்பூரில் கொஞ்சம் பணவசதி கிடைத்திருந்தால் போதும் — திருவத்திபுரம் தொகுதியில் ஆதரவு பெற்றவர் 500 ஓட்டுகளில்தான் தோற்றார்— துரிஞ்சாபுரம தொகுதியில் மாணிககவேலர் பட்டபாடு சாமான்யமா! — ஆமாம், போன மாதம், உங்களூர் கூட்டத்துக்கு யாரை அழைத்தீர்கள்? — 'நம் நாடு' எத்தனை வருகிறது உங்கள் கிராமத்துக்கு—இப்படி, ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளவும், 'இவர்தான் களம்பூர் கழகச் செயலாளர்! அவர் போளூர் கழகப் பொருளாளர்!', என்று அறிமுகம் செய்துகொள்ளும் வாய்ப்பும், மாநாடுகளிலேதானே கிடைக்

கின்றன. இந்த மகிழ்ச்சியைத் தான் குடந்தைப பெரியவர் சுட்டிக் காட்டினார்! உண்மையில், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சுயமரியாதை இயக்கத்தின்பால் தொடர்பு பூண்டு பணியாற்றும் எவருக்கும் இதுபோது நடைபெறுகிற மாநாடுகளைக் காணின், வாழ்நாளில் சந்திக்க வேண்டிய காட்சி தென்படுகிறதெனும் ஆனந்தமே மலரும். எவ்வளவு மக்கள்! இத்துணைக்கும் அதிக நாள் விளம்பரம் கூட இல்லை, வடாற்காடு மாநாட்டுக்கு!! இருந்தும், இருவரா, நூறு, ஆயிரமா? பல்லாயிரக் கணக்கில் மக்கள்! அதுவும், பலர் குடும்பத்தோடு வந்து 'கூடாரம்' அடித்து இருந்தனர்!! இந்தக்காட்சி, சாதாரணமானதா?

மாநாடுகளைப் பற்றி நாமும் அடிக்கடி கேள்விப்படுகிறோம்— 'மாஜி' மகாராஜாக்கள் வருகை தந்தனர், பிர்லா வழங்கினார் பல இலட்சம், பெரிய பெரிய மந்திரிகள் வந்தனர், பத்திரிகைக்காரர்கள் பலநாள் விளம்பரம் செய்தனர், பல மில் முதலாளிகள் விமானத்தில் அழைத்து இலட்சம் இலட்சமாக 'செக்' தந்தனர், இட்டிலிப் பானையொன்று தடவைக்கு 200 இட்லி சுடும் அளவில் ஏற்பாடு செய்யப்பட்டது எனும் செய்திகளை. அந்தக் காங்கிரஸ் மாநாடுகளில் நமக்குத் தெரிவதெல்லாம், வெறும் ஆடம்பரம் மட்டுமே! ஆனால், நமது மாநாடுகளில் தென்படும் ஆர்வம் எங்கே கிடைக்கிறது அங்கெல்லாம்!! சமீபத்தில், மதுரைக்கருகில் ஒரு அரசியல் மாநாடு நடத்தினராம் காங்கிரஸ் கட்சியினர், அமைச்சர்கள், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர், முதலியோரெல்லாம் போய்க் கலந்து கொண்டனர். அந்த மாநாட்டில் எதுபற்றிப் பேசினராம் தெரியுமா? சாதிச் சனியன் — சமூக பேதம — தாய்மொழி வளர்ச்சி — இவைகளைபபற்றியெல்லாம் பேச என்ன இருக்கிறது அவர்களுக்கு? சட்டியிலிருந்தால்தானே அகப்பையில் வர! ஆகவே, தலைமை தாங்கியவரிலிருந்து நன்றி கூறியவர் வரையில், நம்மைப்பற்றியே பேசினார்களாம். வார்த்தைக்கு வார்த்தை, பிரசங்கி விட்டு பிரசங்கி, திராவிட முன்னேற்றக் கழகம் பற்றிக் குறிப்பிட நேர்ந்திருக்கிறது. பெரிய கட்சி! பெரிய திட்டங்களைப் போட்டு வைத்திருக்கிற கட்சி! ஐயாயிரம் கோடி, ஆறாயிரம் கோடி என்று பேசுகிற கட்சி! ஆளுகிற கட்சி!- ஆனாலும், மாநாடு கூட்டி (மகாநாட்டில் யார் வருவார்கள்? அவர்கள் கட்சியினர்தானே அதிகம் இருக்கும்...) அங்கேயும் பேசுவதற்கு "நாம்தான்" பொருளாகக் கிடைத்தோமெனில், திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு மாபெரும் தேசிய இயக்கமாக உருப்பெற்று வருகிற தென்பதை யாரே மறுபபர்?

*

"போர் என்றால் முகஞ் சுளிப்போரும், சிறையென்றால் சிந்தை நொந்திடும் பேதைகளும், இம் மாவட்டத்தில் இல்லை. தலைவர்களின் வழி, வழியே நடந்து கொள்கையிலிருந்து இம்மியும் பிறழாது, குருதி கொட்டவேண்டிய நேரத்தில் குருதியைக் கொட்டி, காணிக்கை செலுத்த வேண்டிய நேரத்தில் காணிக்கையைச் செலுத்தி, ஏறுநடை போடும் மாவட்டம் எமது...கட்சியிடும் கட்டளையை சிரமேற்தாங்கி, தொல்லைகள் பல சூழ்ந்தாலும், தூசெனக் கருதி எடுத்த பணியை விடாது, மாற்றாரின் சுடுசொல் சுளீரெனக் கொட்டினாலும் அதைக் கவனியாது தாயகப் பணியே, தலையாய பணியென நிலைகுலையாது பாடுபடும் மாவட்டம்...அண்ணா அவர்கள் தீட்டிய "ஆரியமாயை"யை இந்த அரசாங்கம் தடை செய்தபோது இம் மாவட்டத்தில் உள்ள நமது கழகக் கண்மணிகள், பொதுமன்றத்தில் அந்த அறிவு விளக்கத்தைப் படித்து, பொடியாக்கினர் ஆளவந்தாரின் அடக்குமுறை தர்பாரை. ஆச்சாரியார் கொண்டு வந்த கல்வித் திட்டத்தை எதிர்த்தும் ரயில் நிறுத்தப் போராட்டத்திலும் கணிசமான பங்கைப் பெற்ற மாவட்டம் எங்கள் மாவட்டம்......அதுமாத்திரமல்ல, அண்மையில் முடிந்த பொதுத் தேர்தலில் வடாற்காடு நான்கு சட்டமன்ற உறுப்பினர்களையும் ஒரு மக்கள் மன்ற உறுப்பினரையும் வழங்கிய பெருமை எங்களுக்குத்தான் உண்டு என்று சற்றுக் கர்வத்தோடு கூட கூறுவேன்......" என்றார் யாவரையும் வரவேற்ற வடாற்காடு மாவட்ட செயலாளர் முல்லை-சத்தி. கடமையுணர்ந்து செயலாற்றும் காளைகளைப் பெற்ற மாவட்டச் செயலாளரன்றோ! கர்வம் ஏன் வராது!! சத்தியம், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே படித்தபோது, எவரும் "இவர்ஒரு நாளைக்கு தீவிரஅரசியல் தொண்டராவார்" என்று எதிர்பார்த்திருக்கமாட்டார்கள். அப்படியிருந்தவர்! ஆனால் அவரையே கல்லக்குடி போராட்டம் கவர்ந்து ஆறு மாதச் சிறைவாசம் ஏற்கும் துணிவை அளித்து, கழகத்தின் தொண்டராகும்படியும் செய்தது என்றால்,வளரும் கழகத்தின் சிறப்பினைப் பற்றிச் சொல்ல வேறென்ன சான்று வேண்டும்? சத்தி, சொன்னதுபோல, பல வகைகளில்வடாற்காடுகுறிப்பிடப் பட வேண்டிய மாவட்டமேயாகும். வரப்போகும் **இந்தி எதிர்ப்பு அறப்போரின்** கால்கோள் விழாவினையும் செய்து இப்போது இன்னும் பெருமை தேடிக்கொண்டுவிட்டது. முதல்நாள் நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில்,பேசிய அனைவரும், எரிமலைகளாக விளங்கினர்! துவக்கிவைத்த C. V. M. அண்ணாமலையும், தலைமை தாங்கிய அருணகிரிநாத அடிகளும் மட்டுமல்ல, ஒவ்வொருவருக்கும் ஓடிவரும் இந்தியைப் பொடிப் பொடியாக்க வேண்டுமெனும் உத்வேகமும் உணர்ச்சியுமே அலைமோதிற்று. அந்த வேகம் இரண்டாம் நாள் நடைபெற்ற அரசியல் மாநாட்டிலும் எதிரொலிக்காமலில்லை. "எப்போது அறப்போர்? இடுங்கள் கட்டளை!" என்று கேட்பதுபோல இருந்தது கையொலித்து முழக்கம் செய்த காட்சி. அன்பில் தர்மலிங்கம் தலைமையில் கிருட்டிணமூர்த்தி துவக்கிவைத்த அரசியல் மாநாட்டின் நிகழ்ச்சிகளையும், முடிவுகளையும் 'நம் நாடு' உங்களுக்குச் சொல்லியிருக்கும்.எவ்வளவுதான் சொன்னாலும், எழுதினாலும் மாநாட்டின் அருமை பெருமையினை இன்னொரு தட்வை கண்டிடவோ—காட்டிடவோ இயலுமா! குன்றோரம, படபடவென அடித்துப் பறந்ததே வண்ணக்கொடி; அதன் அழகையும் அங்கு திரண்டிருந்த மக்கள் வெள்ளத்தையும் வர்ணிக்கத்தான் முடியுமா!!

★

# ஜிப்சம்

—[கரந்தை—கணேசன்]—

தென்னகத்து மண்ணிலே பாலை என்பதே கிடையாது என்றாலும் வறண்ட நிலங்கள் பல உள என்ற நிலை இருக்கக் காண்கிறோம். இத்தகு வறண்ட பகுதிகளை எல்லாம் வளம் கொஞ்சிடும் சோலைகளாக்க முடியும் அதற்கான வசதியும், வாய்ப்பும் செய்தால் என்ற நிலையும் இருக்கக் காண்கிறோம்.

'இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்'

என்ற வள்ளுவருடைய வாசகத்தை உணர்ந்துவிட்டு, தாயகத்தின் பல்வேறு பகுதிகளை நோக்கும் பொழுது அந்த வாசகத்தின் உண்மையையும் பல்வேறு விதமான பகுதிகளிலே நிலத்தாய் நம்மைப் பார்த்துச் சிரித்துக்கொண்டிருக்கும் நிலைமையையும் காணலாம். இத்தகு நிலைமைகளில் ஒன்றுதான் திருச்சி மாவட்டத்தின் தென் கோடியிலே நில மாதா தனது கர்ப்பத்திலே நமக்காக வைத்துக் காத்துக்கொண்டிருக்கும் பெரும் நிதி —ஜிப்சம்.

இன்றைய நாகரிக உலகில் தேவையான பொருள்களை உண்டாக்கும் மிக மிகத் தேவையான பொருள் இது. பெரம்பலூர்—லால்குடி வட்டத்திலே சற்றேறக்குறைய அறுபது (60) சதுர மைல் சுற்றளவில் பரவிக் கிடக்கிறது. எந்தவித யந்திர உதவிகளும் இல்லாமல் இஃது வெட்டி எடுக்கப்படுகிறது. பழைய முறையிலேயே வெட்டி எடுக்கப்படுவதால் காலமும், நேரமும், உழைப்பும் வீணாக விரயம் செய்யப்படுகிறது எனக் கூறலாம்.

கிட்டத்தட்ட பத்தாயிரம் தொழிலாளர்கள் இந்தப் பணியிலே ஈடுபடுகிறார்கள். மிக மிகச் சிறிய அளவில் சில தனிப்பட்ட முதலீட்டு நிலையங்கள் தங்களின் தொழிலுக்குத் தேவையான அளவில் வெட்டி எடுக்கும் பொழுதே பத்தாயிரம் தொழிலாளர்கள் வேலை செய்கிறார்கள் என்றால், பெரிய அளவில் யந்திர சாதனங்களைக்கொண்டு வெட்டி எடுத்து, இங்கேயே இதிலிருந்து செய்யக்கூடிய பொருள்களைச் செய்தால், அதனால் இன்னும் எவ்வளவோ ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு வாழ்வும், வளமும் அளிக்க முடியும் என்று உறுதியுடன் கூறலாம். ஜிப்சம் கிடைக்கும் இந்தப் பகுதிகளைப் பார்வையிடுகிறபொழுது அந்தப் பாறைகள் சொல்லும் கதை இது தான்.

தற்போதைய நிலையில் சுற்றுவட்டாரத்தில் முப்பது (30) கிராம மக்கள் இந்தப் பணியிலே ஒரு சாரார் விவசாய வேலைகள் இல்லாத காலங்களிலும், மற்றொரு சாரார் வேலையற்ற காலங்களில், வேலை தேடி வரும் நிலையினர், வேறொரு சாரார் இதுவே கதியென இருந்து வருபவர்கள். இவர்கட்கு கிடைக்கும் ஊதியமோ மிகக் குறைவானது, அதுவும் நிலையானது அல்ல. அவரவர்கள் எவ்வளவு ஜிப்சம் வெட்டி எடுக்கிறார்களோ, அந்த அளவுக்கு ஏற்பத்தான் ஊதியம் கிடைக்கும். எவ்வளவுதான் நெற்றி வேர்வை நிலத்தில், சொட்டச்சொட்ட பாடுபட்டு வெட்டி எடுத்தாலும் சராசரியாக ஒரு மனிதனுக்கு மாதத்திற்கு 25-0-0 ரூபாய்களுக்கு மேல் அவன் பெறமுடியாது. குடும்பமே சேர்ந்து உழைத்தால்தான் ஏதோ போதிய அளவு ஊதியத்தை எதிர்பார்க்கலாம். சில சமயங்களில் வெட்ட, வெட்ட வெறும் மண்ணையே மட்டும் பெறக் கூடும்! ஆனால் வெட்டி எடுக்கச்செய்யும் கம்பெனிகளுக்குக் கிடைக்கிற இலாபமோ......?

ஜிப்சத்திலேயே மூன்று ரகங்கள் கிடைக்கின்றன. முதல் ரகம், இரண்டாம் ரகம், மூன்றாம் ரகம் என மூன்று வகையாகப் பிரிக்கிறார்கள். முதல் வகை டன் 50-0-0 ரூபாய் விலை பெறுகிறது. இரண்டாம் வகை டன் 35-0-0 ரூபாய் விலை பெறுகிறது. மூன்றாம் வகை டன் 25-0-0 ரூபாய் விலை பெறுகிறது. சராசரியாகக் கணக்கிட்டால் ஜிப்சம் டன் ஒன்று 35-0-0 ரூபாய்க்குக் குறையாமல் கிடைக்கிறது. இதை வெட்டி எடுப்பதற்கான செலவிலிருந்து சர்க்காருக்கு வரி கட்டும் செலவு வரை டன் ஒன்றுக்கு ரூபாய் 17-8-0 ஆகிறது. மீதமுள்ள ரூபாய் 17-8-0 ரூபாயும் டன் ஒன்றுக்கு இலாபமாகக் கம்பெனிகளுக்குக் கிடைக்கிறது. இதில் ஈடுபட்டுள்ள நிலையங்கள் கீழ்வருவன, திருச்சி மைனிங் ஓர்கஸ், தி ஜிப்சம் இண்டஸ்டிரீஸ் லிமிடெட், அசோசியேட்டேட், சிமெண்ட் பேக்டரிஸ் லிமிடெட், டால்மியா சிமெண்ட் கம்பெனி லிமிடெட், ஸ்டார் அஃப் இந்தியா, இராஜம் கெமிக்கல்ஸ், ஸ்ரீ சங்கர் ராஜம் அய்யர்ஸ் லிமிடெட். சுமாராக இந்நிலையங்கள் தம்முள் கொண்டிருக்கும் நில அளவுகள்:

| | | |
|---|---|---|
| திருச்சி மைனிங் ஓர்க்ஸ் | - 4200 | ஏக்கர்கள் |
| தி ஜிப்சம் இண்டஸ்டிரீஸ் லிமிடெட் | - 800 | ,, |
| அசோசியேட் சிமெண்ட் பேக்டரிஸ் லிமிடெட் | - 500 | ,, |
| டால்மியா | - 460 | ,, |
| ஸ்டார் அஃப் இந்தியா | - 400 | ,, |
| ரஜம் கெமிக்கல்ஸ் | - 7 | ,, |
| ராஜன் சங்கர் அய்யர்ஸ் | - 40 | ,, |

இக்குறைந்த அளவுள்ள பகுதிகளில்தான் தற்போது எடுக்கப்படுகிறது, இன்னும் பரந்த பரப்புள்ள பகுதிகள் ஏதும் அற்றுக் கிடக்கின்றது.

ஜிப்சம் என்பது சுண்ணாம்புச் சத்துள்ள ஒரு பொருள். மணல் போன்ற நிறமுள்ளது. கண்ணாடி போன்று பளபளக்கக் கூடியது. இஃது இங்கு கிடைப்பதற்குக் காரணம், இப்பகுதி ஒரு காலத்தில் கடலாக இருந்திருக்க வேண்டும் என்று பூகர்ப்ப ஆராய்ச்சியாளர்கள் பகர்கிறார்கள்.

இதிலிருந்து நாட்டுக்குத் தேவையான நல்ல பல பொருள்கள் கந்தகம், அமோனியம் சல்பேட், சாக்கட்டிகள், சல்பூரிக் ஆசிட, முகப் பவுடர், பற்பொடி, வீட்டுக் கூரைகளுக்கான ஜிப்சம் ஓடுகள், (கல்நார் ஓடுகள் போன்றவை) சிமெண்ட் செய்ய, வேறு சில உயர் வகைகள் சூப்பர் பார்வெட் உரத்திற்கும், ரசாயன மாறுபாடுகளுக்கும் (Chemicals) உபயோகப்படுகின்றது.

இங்கு வெட்டி எடுக்கப்படுகிற ஜிப்சம் கற்கள் குறிப்பாக தமிழ் நாடு, ஆந்திரம், கேரளம், கர்னாடகப் பகுதிகளுக்கு மிகுதியாகச் சென்று அங்கு விலைப் பொருள்களாக ஆக்கப்படுகின்றது. இவ்வாறு பல்வேறு இடங்களுக்கு வெட்டி எடுத்துக் கொண்டு செல்வதைவிட இப்பொருளை எடுக்கப்படும் இவ்விடத்திலேயே தேக்கி, இங்கேயே அதற்குரிய நிலையங்களைத் துவக்கினால் தென்னகத்தின் வளம் குன்றிய நிலை ஓரளவு மாறப் பெரிதும் பயன்படும் என்று திண்ணமாகக் கூறலாம். தொழில் செய்வதற்கு வசதியான முறையில் அருகாமையில் நெய்வேலியிலிருந்து நிலக்கரிகளைக் கொண்டுவர வசதி வேறு உள்ளது. தென் - ஆற்காடு, திருச்சி மாவட்டங்களின் எல்லைக் கோட்டில் இரண்டும் இருப்பதால் வசதியும் வாய்ப்பும் அற்ற நிலை என்ற சொல்லுக்கே இடமில்லை.

இவ்வாறாகப் பார்க்கும்பொழுது தமிழகத்தின் வருங்கால உயர்வுக்கு தாயின் கர்ப்பத்திலே தூங்கிக் கிடக்கும் பொருள்களில் ஜிப்சம் ஒன்று என்பதை யாரும் மறுக்கமுடியாது.

## கே. வி. கே. சாமியின் நினைவு நாள்

திராவிட முன்னேற்றக் கழக முன்னணி வீரரும், செயற்குழு உறுப்பினரும், நெல்லை மாவட்ட செயலாளரும், தொழிலாளர் தலைவருமாகிய தோழர் கே, வி. கே. சாமி அவர்கள் நம்மை விட்டுப் பிரிந்து, 20—9—57 அன்று ஓராண்டு நிறைவு பெறுகிறது. எனவே, நாடெங்கிலுமுள்ள தி,மு.கழகக் கிளைகள் அவரது நினைவு நாளாக **29-9-'57** ஞாயிறு அன்று கொண்டாடுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறோம்.

"அறிவகம்"
சென்னை - 13
19-9-'57.

**- இரா. நெடுஞ்செழியன்**
பொதுச்செயலாளர்
தி. மு. கழகம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

மாகப் போராடி வருகின்றனர்— வினோபா அடிகள்கூட கண்டித்தார். எனினும் என்ன ! காசிநாதர்கள், மறுத்து வருகிறார்கள்—"சண்டாளர்கள், தாழ்ந்த சாதிக்காரர்கள் கோயிலுக்குள் நுழைய ஒரு சிறிதும் ஒப்போம்", என்று பிடிவாதமாக இருந்து வருகிறார்கள் !!

இந்திய அரசியல் சட்டத்தில் எல்லோருக்கும் சமநீதி என்கிற 'ஷரத்து' உண்டு ! இதோ, மனித நீதி மறுக்கப்படுகிறது காசியில் !!

சென்னை சட்டசபையில் தாழ்த்தப்பட்டோர் பற்றிய விவாதம் வந்தபோது சண்டப் பிரசண்டம் செய்தனர், காங்கிரஸ் மந்திரிகள் —"அரிசனங்களுக்கு உரிமைகள் அளித்ததே எமது காங்கிரஸ் தான்", என்றனர். அதற்காக காந்தியடிகளும் ஏனையவரும் செய்த அருந்தொண்டினையெல்லாம், ஆதாரத்துக்கு அழைத்தனர்.

இதோ, அவர்கள்தம் தலைவரின் மாகாணத்தில், தாழ்த்தப்பட்டோருக்கு உரிமை மறுக்கப்படுகிறது. உயர்குடியினர், "நீசனே ! ஈசன் ஆலயத்துக்குள் வருவதோ ?", என்று கொக்கரிக்கின்றனர்.

இந்தக் கொடுமையைச் சகிக்காத பழங்குடி மக்கள், "கவர்னர் பிரான் வரப்போகிறாராமே ! அவருடனாவது சென்று பார்ப்போம். நம்மை விடுகிறார்களா, மறுக்கிறார்களா என்பதை ஆளும் கவர்னரே தெரிந்துகொள்ளட்டும். அப்போதாவது, நீதி கிடைக்கும் நிலை கிட்டாதா?", என்று கவர்னருடன் நுழைய இருந்திருக்கின்றனர். கவர்னரோ, "நமக்கேன் இந்தத் தகராறு? ஆண்டவனைத் தரிசிக்காவிடில்கூடப்பரவாயில்லை இந்த ஆபத்தில் போய்ச் சிக்கிக் கொள்ளவேண்டாம்", என்று வந்த வழியே திரும்பிவிட்டார். இத்தனைக்கும் கவர்னர்' கிரி, 'முன்ஷி'யல்ல; முற்போக்கு எண்ணமும், பாட்டாளிச் சமூகத்திடத்துப் பரிவும் கொண்டவர்! அவரே, திரும்பியிருக்கிறார்!!

காரணம், **அவர்கூட** அஞ்சுமளவுக்கு காசி நகரத்து வைதீகர்களின் செல்வாக்கு இருககிறது. கவர்னர் என்ன, அந்த நேருவே வந்தாலும்கூட ஒரு கை பார்ப்போம், என்று இருக்கின்றனர் என்று தெரிகிறது!!

பேபஸ் நீதிமன்றத்தையே துச்சமென மதிக்கிறான், அமெரிக்காவில். "பேபஸ்கள்", இங்கும் இருக்கிறார்கள், காசியில்.

பேபசின் கொட்டம் அடக்கி, மனித நீதி மலரச்செய்வதற்காக, இராணுவப் பாதுகாப்பு அளிக்கிறார் ஐசனோவர்! கருப்பர்கள், வெள்ளையருடன் கலந்துறவாடிட எத்தனிக்கும்போது ஏதாயினும் ஆபத்து வந்திடின, அதற்குப் பாதுகாப்பாக இருக்க இராணுவத்தை அனுப்புகிறார், அமெரிக்கக் குடியரசுத் தலைவர்.

ஐசனோவர், ஒரு முற்போக்குவாதியல்ல! பழைமைக்குச் சாமரம வீசுபவர் — நேருவைபபோல, புதுமை உலகம் காண்பேன் என்று முரசு முழக்குகிறவர் அல்ல. அபபேற்பட்டவருக்கே, இப்படி உயர்வு தாழ்வு பேதம், தன் ஆட்சியில் உலவுவது, அநாகரீகம் என்று தெரிகிறது. மாகாண அரசின் அதிகாரத்தில் தலையிடுவது உகந்ததல்ல என்கிற சம்பிரதாயம் இருந்துங்கூட, இந்த விஷயத்தை என்னால் சகிக்கமுடியாது, உலகம் என்னைப் பழிக்கும், என்று இராணுவத்தை அனுப்புகிறார்!!

ஐக்கியமாகாணமோ, டில்லியின் தவக்கோட்டம் எனக் கருதப்படுவது. உள்நாட்டமைச்சர் பண்டித பந்த் பிறந்த இடம். உலக நீதி போதிக்கும் நேரு பண்டிதரின், சொந்த இடம். அங்கே மனித நீதி மறுக்கப்படுகிறது. வேறு எந்த விஷயமானாலும் மாகாணங்களின் அரசியலில் தலையிடும் ஆற்றலும் அதிகாரமும் கொண்ட டில்லியால், காசியில் மனித உரிமையை நிலைநாட்ட மனம்வரவில்லை — கவர்னரே கண்டஞ்சுமளவுக்கு நிலைமை உள்ளது!!

யாவருக்கும்சமநீதியும்வாய்ப்பும் அளிக்கப்படவேண்டும, என்று இந்திய அரசியலமைப்புச் சொல்கிறது. காசி வாழ் பழங்குடி மக்கள், அந்தச் சமநீதி வழங்கப்படவேண்டும் என்றே விரும்புகின்றனர். இந்தச் சமநீதி சமூகம் உருவாகவேண்டுமென்பதனை, காங்கிரசும் தன் அடிப்படைக் கொள்கைகளில் ஒன்றாகக் கொண்டிருக்கிறது. காந்தியடிகள், தன் இலட்சியங்களில் ஒன்றெனக் கொண்டிருந்தார் — தாழ்த்தப்பட்ட மக்களுக்கு "ஹரி—ஜனங்கள்", அதாவது "மகாவிஷ்ணுவின் மக்கள்"—கடவுளின் தலைப்பிள்ளைகள்—என்கிற பட்டத்தையும் சூட்டிக் காட்டினார். இன்றும், எந்தக் காங்கிரஸ் தலைவரும் தமக்கு 'ஹரிஜன சேவை'யில் இருக்கும் ஆர்வத்தைக் காட்டிக் கொள்ளத் தவறுவது கிடையாது. ஆனால், இதோ, கண் எதிரே 'காசி' நடக்கிறது!!

ஐசனோவருக்கு, மனித நீதியை நிலைநாட்டுவதில் ஏற்படும் துணிச்சல், உலகுக்கே அன்பு போதிக்கும் நேருவுக்கு ஏன ஏற்படவில்லையோ!

ஐக்கிய மாகாண சர்க்காரைத் தூண்டி, இந்த அநீதிக்கு முற்றுப்புள்ளி வைக்கக்கூடிய செல்வாக்கும், சக்தியும் பெற்றவர், நேரு. முடிசூடா மன்னர் அவர்! ஏன், பத்தாண்டு காலமாகியும் இந்தக் கோரத்துக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவில்லை? கவர்னரே கூட, அஞ்சியன்றோ, திரும்பியுள்ளார்!!

அக்கிரமத்தைத் தகர்க்க ஐசனோவர் படையினையே அனுப்புகிறார்.

இங்கும் நமது மத்தியபீடம்—அதிகாரங்களையெல்லாம் குவித்து வைத்திருக்கும் மத்ய அரசு—'இம்' என்பதற்குக்கூட தன் உத்திரவினை எதிர்நோக்கும்படி மாநிலங்களை ஆக்கிவைத்திருக்கும் டில்லி — சந்தர்ப்பம் வருகிறபோது இராணுவத்தை அனுப்புவதுண்டு. இது போன்ற சமூக பேதத்தை ஒழித்து சத்திய நெறி தழைக்கச் செய்வதற்கு அல்ல! மனித நீதி மறுப்போருக்கு உணர்வுவரச்செய்ய அல்ல! உரிமை கேட்கும் மக்களைச் சுட்டுத்தள்ள.

கண்டோம் மராட்டியத்திலும், குஜராத்திலும், இந்த இராணுவம் அனுப்பப்பட்டு என்னென்ன செய்தது, என்பதை. டில்லிகூட சொல்லிற்று, படைக்கு ஏன் 200-கோடிகளுக்குமேல் பணச்செலவு என்று கேட்டபோது "வெளிநாட்டு ஆபத்துக்காக மட்டுமல்ல, அதிக இராணுவம் நமக்குத் தேவையாக இருப்பது. உள்நாட்டின் பாதுகாப்புக்கும் தேவைப்படுகிறது" என்று.

உயர்வு தாழ்வுப் பிரச்னை, உள்நாட்டு விஷயம்தானே! உரிமை மறுக்கும் உன்மத்தர்களுக்குப் பாடம் வரச்செய்ய படையின் உதவியை நாடினால் என்ன—சோறு கேட்டால் படைபாயும், எல்லை கேட்டால் இராணுவம் சுடும், ஏனிந்தத் தொல்லை தருகிறீர் என்று அறப்போர் துவக்கினால் துப்பாக்கி வெடிக்கும், ஆனால் சமநீதி பெற்றுத்தர, மனித உரிமைக்குப் பக்கபலம் காட்ட, படை வராது! அது, அங்கே ஐசனோவர் நாட்டில் நடக்கிறது!! ★

# டில்லியின் இந்தி ஆதிக்க முயற்சிகள் - தமிழர்களுக்குப் பேராபத்து

—★—

திருவண்ணாமலையில் கடந்த செப். 21-ந் தேதி நடைபெற்ற இந்தி எதிர்ப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானமாவது :—

(அ) இந்தி அல்லாத மொழியினர்மீது-குறிப்பாகத் தென்னாட்டின் மீது தபால் — தந்தி, இரயில்வே, புதிய நாணய முறை, வானொலிச் செய்தி போன்றவைகளில் நேர்முகமாகவும், மறைமுகமாகவும் இந்தியைத் திணித்து அரசியல் ஆதிக்கம்பெற எடுத்துக்கொண்டுவரும் பல்வேறு முயற்சிகளோடுகூட, பிறமொழியினர்மீது அரசியல் ஆதிக்கம் செலுத்த இந்தி ஏகாதிபத்தியத்தை உருவாக்குவதற்காகக் கேர் கமிட்டி மூலம் மத்திய அரசாங்கமும், அதனை நடத்தும் காங்கிரசுக் கட்சியும் பயங்கரத் திட்டம் தீட்டியிருப்பது, தென்னாட்டுக்கு வரவிருக்கும் பேராபத்து என்பதை எடுத்துக்காட்டுவதுடன், அந்தப் பேராபத்தினின்றும் நம்நாடு தப்பி விடுதலைபெற எத்தகைய நியாயமான நடவடிக்கைகளில் ஈடுபடவும், எல்லாவிதமான தியாகங்கள் புரியவும், தமிழர்கள் இன்று முதலே தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்று இந்த மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

(ஆ) மக்களின் கவனம் வேறு பக்கங்களில் ஈர்க்கப்பட்டிருந்த நேரத்தில் மக்களின் குறிக்கோளை எடுத்துக்காட்டத்தக்க முறையில் அல்லாமல், மக்களின் நேரடி வாக்குகளைப் பெறுமல், ஒரு கட்சியின் எதேச்சாதிகார முறையுடன் அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணய சபையின் ஆதரவில் ஒரே ஒரு ஓட்டு மெஜாரிட்டியில், அவசர அவசரமாகவும், பொறுப்பற்ற முறையிலும் நிறைவேற்றப்பட்ட மொழி சம்பந்தமான விதி, மக்களின் உண்மையான குறிக்கோளைக் காட்டுவதாகாது என்பதாலும், அந்த விதி, இந்தியல்லாத பிற மொழியாளர்களை அடிமைப்படுத்தப் பயன்படும் ஆதிக்கக் கருவியாக இருப்பது தெளிவாகத் தெரிந்துவிட்டபடியாலும், உடனடியாக அரசியல் சட்டத்திலிருந்து மொழி சம்பந்தப்பட்ட அந்த விதி அகற்றப்பட வேண்டுமென்று இந்த மாநாடு மத்திய அரசை வற்புறுத்துகிறது.

(இ) தாய்மொழியில் ஆட்சித் துறை, நீதிமன்றத் துறை அலுவல்களை வெற்றிகரமாக்குவதுடன், பிற மாநிலங்களுடனும், உலகுடனும் தொடர்புகொள்ள ஆங்கிலத்தை இப்போதுபோலப் பயன்படுத்திக்கொள்ளும் திட்டத்தை நீடிப்பது என்ற கருத்தினையும், இந்த மாநாடு ஆட்சியாளர்களுக்கு வலியுறுத்திக் கூறுகிறது.

(ஈ) இந்தி ஆதிக்கத்தை ஒழிப்பதற்காகத் தக்க திட்டம் தீட்டி, நடவடிக்கைகளை வகுத்திட பொதுச்செயலாளரை இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

# திருவண்ணாமலை மாநாட்டுத் தீர்மானங்கள்

தென்னாட்டை வஞ்சித்து வட நாட்டை வளமாக்கும் முறையில் ஐந்தாண்டுத் திட்டத்தைப் போட்ட டில்லி ஆதிபத்தியம், இப்பொழுது அதற்கான நிதி நிலைமைகளைச் சமாளிக்க முடியாத நிலையில், பெரியதும் முக்கியமானதுமான திட்டங்களை மட்டும் காப்பாற்றுவதாகச் சொல்லிக்கொண்டு, வடநாட்டில் போடப்பட்டுள்ள பெருந்திட்டங்களை மட்டும் நிறைவேற்றுவதில் மிக்கக் கவனமாக இருப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், தொழில் துறையில் தாழ்ந்துள்ள தென்னாட்டை வளப்படுத்தும் வகையில் திட்டத்தை மாற்றி அமைக்குமாறு இம்மாநாடு டில்லி அரசை வற்புறுத்துகிறது.

*

பற்றுக்குறை வரவு-செலவுத் திட்டங்களைத் தொடர்ந்து போட்ட காரணத்தாலும், ஐந்தாண்டுத் திட்டங்களின் பேரால் வடநாட்டில் மட்டும் பெருவாரியான பணத்தைக் கொட்டிய காரணத்தாலும், பணப்பெருக்கம் உண்டாகி, விலைவாசிகள் குறிப்பாக உணவுப் பொருள்களின் விலைகள் ஏறியிருப்பதை இம்மாநாடு கவலையோடு கவனிப்பதுடன், பணப்பெருக்கத்தைத் தணிக்கவும், செலவினங்களை எல்லாப் பகுதிகளிலும் ஏற்ற அளவு பகிர்ந்திடவும், உணவுப் பொருள்களின் விலைகளைத் தக்க முறையில் கட்டுப்படுத்தவும் வேண்டும் என இந்திய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

வாழ்க்கைத் தரம் குறைந்து, விலைவாசிகள் உயர்ந்து, நாட்டின் பொருளாதாரம் சீர்கேடு அடைந்திருக்கும் நிலையில், பெருவாரியான பொது மக்களைப் பாதிக்கும்படி நேர்முகமாகவும், மறைமுகமாகவும் ஆண்டு தோறும் நூறு கோடி ரூபாய் அளவுக்கு புது வரிகளைப் போட்டுள்ளதானது நாட்டின் நிலைமையை மேலும் மோசமாக்கி இருப்பதற்காக இந்தியப் பேரரசை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், "செலுத்தக் கூடியவர்கள்மீது மட்டுந்தான் வரி போடுவோம்" என்று தேர்தல் காலத்தில் கூறிய காங்கிரசுக் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வந்ததும், நூற்றுக்கு எழுபத்தைந்து பங்கு வரியை ஏழைகள் பயன்படுத்தும் பண்டங்கள்மீது சுமத்தியிருக்கும் முரண்பாட்டைச் சுட்டிக்காட்டுவதுடன், ஏழைகளைப் பாதிக்கும் இக்கொடும் வரிகளை நீக்குமாறு இந்தியப் பேரரசை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

தேர்தல் காலத்தில், கைத்தறி நெசவாளர்களுக்கு உறுதிமொழிகள் பல தந்து அவர்களுடைய ஆதரவைத் தேடி பெரும்பான்மை வெற்றிபெற்றுள்ள காங்கிரஸ் கட்சி சட்ட மன்ற உறுப்பினர்கள் அதே கைத்தறி நெசவுத் தொழில் பாதுகாப்பிற்கு என்று, 'கரை போட்ட வேட்டியும், கலர்ப் புடவையும் கைத்தறிக்கே ஒதுக்கப்படவேண்டும்' என்ற தீர்மானம் சென்னை சட்டமன்றத்தில் வந்த போது, தமது கட்சி கட்டுப்பாட்டிற்காக அதை எதிர்த்து வாக்களித்த வன் செயலை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், கைத்தறி நெசவுத் தொழிலாளர் பாதுகாப்புக்கு நிரந்தரமான ஒரு திட்டத்தை இந்த அரசியலார் உடனடியாகச் செய்யவேண்டுமென்று இம்மாநாடு வலியுறுத்துகிறது.

*

தமிழ் மக்களின் தாயகமான தமிழகத்திற்குச் 'சென்னை ராஜ்யம்' என்று வழங்கும் பெயரை மாற்றித் 'தமிழ் நாடு' என்றே பெயரிட்டு வழங்க வேண்டுமென்று பல ஆண்டுக் காலமாகவே பல்வேறு அரசியல் கட்சியினரும் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டும், சென்னை சட்டமன்றத்தில் அதற்கான தீர்மானத்தைக் கொண்டு வந்துங்கூட, ஆளும் கட்சியினராகிய காங்கிரசார், பொதுமக்களின் விருப்பத்தை மதியாது மாறாக நடப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிப்பதுடன், மேலும் பொது மக்களின் விருப்பத்தை அவமதித்துப் பொறுமையைச் சோதிப்பது பெருங்கேடு பயக்கும் என்று அரசியலாருக்கு இம்மாநாடு எச்சரிக்கை செய்கிறது.

*

படாஸ்கர் தீர்ப்பு மக்களுக்குத் தெளிவாக இதுவரை அறிவிக்கப்படாதிருக்கிற வருந்தத்தக்க நிலையில், ஓரளவு தெரிவிக்கப்பட்டுவரும் தகவல்களிலிருந்து தமிழ் நாட்டுக்குத் திருத்தணியும் அதை ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று அறிந்து இம்மாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.

*

அதேபோது, ஏற்கெனவே தமிழ் நாட்டுடன் பல்வேறு வகையாலும் தொடர்பு கொண்டு இணைந்து வாழ்ந்துவரும் சில பகுதிகளும், வளமிக்க இடங்களும், செல்வக் காடுகளும், நீர்ப்பாசன வசதிகளும் ஆரணியாறு தேக்கத் திட்டப் பகுதியும், படாஸ்கர் தீர்ப்புப்படி, அங்கு வாழும் மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக, தமிழ் நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்திரத்திற்கு அளிக்கப்பட இருப்பதறிந்து, இம்மாநாடு வருந்துகிறது. சென்னை அரசு, தொடர்ந்து தமிழ் நாட்டுக்கு உரிமையுள்ள இடங்களை இழந்து வருவது கண்டு வருந்துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறி வரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.

*

படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ் நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத் தக்கவகையிலும், மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது.

*

திருச்சி மாவட்டம் குளித்தலை வட்டம் நங்கவரம் பகுதியில், அரசாங்கச் சட்டத்தில் காணப்பட்ட குறைபாடு காரணமாக பெரிய நிலப்பிரபுக்கள் இழைக்கவிருந்த கொடுமைகளை எதிர்த்து, உறுதியும் அமைதியும் குலையாத வகையில் அறப்போர் நடத்தி வெற்றி கண்ட உழவர் பெருங்குடி மக்களைப் பாராட்டுவதுடன், அந்த வட்ட உழவர் முன்னேற்றச் சங்கம் நடத்திய அறப்போரில் ஈடுபட்டவர்களில் 200 உழவர்கள் மீது 70-க்கு மேற்பட்ட வழக்குகளைப் போட்டிருப்பதில், குறிப்பிட்ட பிரச்சினையில் நிலச்சுவான்தாரர்களுக்கும் உழவர்களுக்கும் கடந்த 9-9-57ந்தேதி உடன்பாடு ஏற்பட்டுவிட்டபடியால், அந்த வழக்குகளையெல்லாம் நிபந்தனையின்றி உடனடியாக அரசாங்

## காஞ்சீபுரத்தில்

29—9—57ல் காஞ்சிபுரம் ஆலடிப்பிள்ளையார் கோயில் தெருவில் நாகம்மையார் வாசகசாலை திறப்பு விழா, தோழர் டி. சபாபதி அவர்கள் தலைமையில் அண்ணா அவர்களின் சொற்பொழிவுடன் நடைபெறும்.

கம் வாபஸ் பெற வேண்டுமாறு இம் மாநாடு சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்வதுடன், சட்டத்தில் காணப்படும் குறைபாடுகளை உடனடியாகத் திருத்தி, உழவர் பெருங்குடி மக்களுக்கு நிரந்தரமான பாதுகாப்பு அளிக்கவேண்டுமென வற்புறுத்துகிறது.

*

தமிழ் நாடு முழுதும் உள்ள பீடித் தொழிலாளர்களுக்குப் பாக்டரி சட்டப்படி உள்ள சலுகைகள் இன்றையத்தினம் கிடைக்கவில்லை; ஆகவே, மேற்படி சலுகைகளைப் பெற பீடித் தொழிலாளர்களுக்குப் பாதுகாப்புச் சட்டம் உடனடியாகக் கொண்டுவர வேண்டுமென்று இம்மாநாடு சென்னை அரசாங்கத்தை வற்புறுத்துகிறது.

*

சாத்தனூர் நீர்த்தேக்கம் வேலை முடிவடைந்துவிட்டதாலும், பத்து இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்ட கட்டிடங்கள் காலி செய்யப்பட்டிருப்பதாலும், கூட்டுறவு முறையில் சர்க்கரைத் தொழிற்சாலை ஒன்று அமைத்து வேலையில்லாத் திண்டாட்டத்தை ஓரளவாவது அகற்றவும் மாநில அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

*

(அ) மைசூர் மாநில அரசியலாருடன் உடனடியாகப் பேச்சு வார்த்தை நடத்தி பாலாற்றுத் தண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்த்து வட ஆற்காடு மாவட்ட மக்களின் வாழ்வை வளப்படுத்த முனையுமாறு அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறது.

*

பல்வேறு மாவட்டங்களில், ஓராசிரியர் பள்ளிகளில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தவர்கள் ஈராண்டுக் காலம் பயிற்சி பெற்றாக வேண்டும் என்பதற்காக—வேலையற்றநிலைமைக்கும், வாழ்க்கை நெருக்கடிக்கும் ஆளாக்கப்பட்டிருப்பது காண வருந்துவதுடன், அவர்களது பரிதாபகரமான நிலைமை சென்னை சட்ட மன்றத்தில் எடுத்துரைக்கப்பட்டும் அரசியலார் அவர்கள் குறையைத் தீர்க்காததை இம்மாநாடு கண்டிக்கிறது.

*

குடியேற்றத்தில் மூடிக் கிடக்கும் தென்னிந்திய பட்டுத் தொழிற்சாலையை உடனடியாகத் திறந்து, அத்தொழிலில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களின் எஞ்சியுள்ள வாழ்வையாவது நிலைபெறச் செய்ய அரசியலாரை இம்மாநாடு வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. ★

---

# அக்டோபர் 13

**தாயகத்தோரே!** **தமிழ்க்குடியினரே!**

## நாடெங்கும்

# இந்தி எதிர்ப்பு நாள்

**வேண்டுமென்றே டில்லி பிடிவாதம் காட்டுகிறது**

**மொழியைச் சிதைத்து விழியை இருளாக்க நினைக்கிறது**

**இந்தி! எதிலும் இந்தி!!—என்று திட்டம் தீட்டுகிறது**

'நாய்' வாழ நாடு, மீள நயவஞ்சகம் உணர

## எல்லோரும்

# கண்டனக்குரல் எழுப்புக!

" அக்டோபர் 13ந் தேதியை, இந்தக் குரல் எழுப்புகிற அளவுக்கு நீங்களெல்லாம் தீர்மானம் நிறைவேற்றி, இந்தியாவினுடைய உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த் அவர்களுக்கு ஒரு தீர்மானத்தையும், தலைமைக் கழகத்துக்கு ஒரு தீர்மானத்தையும், நாட்டிலுள்ள அவ்வளவு **படிப்பகங்களும்—நூலகங்களும் அமைப்புகளும்**, திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த சகல மன்றங்களும் அமைப்புகளும், தமிழார்வம் கொண்டிருக்கிற ஏனையோரும் அனுப்பி வைக்க வேண்டுகிறேன்."

**இரா. நெடுஞ்செழியன்,**
பொதுச்செயலாளர்.

---

**மாணவர்களே!** **தொழிலாளர்களே!!**

**நாட்டு மக்களே !!!**

## கண்டனத்தைக் காட்டுங்கள்!

## "எதிர்ப்பு நாள்" நடத்துங்கள்!!